For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்


• பிப்ரவரி 2025

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

• விலை : ரூ 60 • இதழ் 57

இன்றைய கிறிஸ்தவ ஜீவியத்திலும்
வசனமாகிய விதை அனுதினமும் விதைக்கப்பட்டுக்
கொண்டேதான் இருகின்றது **ஆனால்**
அதின் பலன் அது விதைக்கப்படும் இடத்தைப்
பொறுத்தே அமைகிறது...







christianhistoricalsociety.in
@HistoricalSociety

www.christianhistoricalsociety.in




வரலாற்றுச் சங்க நூலக கட்டிடப் பணிகள் நடக்குமிடம் வந்த சிறப்புவிருந்தினர்கள்




நிலைவிடும் நிகழ்ச்சி நடைபெற்ற பொழுது எடுத்தபடம்



நிலைவிடும் நிகழ்ச்சி நடைபெற்ற பொழுது எடுத்தபடம்



தூத்துக்குடி மவுண்ட் திருச்சபையில் புத்தக விற்பனை



ஆச்சி குழும தலைவர் அவர்களுடன்



கார்த்திக் கமாலியேல் அவர்களுடன்



பொருநை விழாவில் கலந்து கொண்ட பொழுது



நூலகத்திற்கு வந்த சிறப்புவிருந்தினர்கள்

# பதிப்பாசிரியரிடமிருந்து...

சுவடுகள் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கர்த்தரின் பெரிதான கிருபையால் நமது வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழ் ஒவ்வொரு மாதமும் பல அறிய வரலாற்றுச் உண்மைகளையும், தகவல்களையும் ஒன்று சேர்த்து உங்களுக்கு ஒரு பொக்கிஷமாகவும், மிஷனெரிகள் அந்நாட்களில் கொண்டிருந்த எண்ணங்களையும் அப்படியே பிரதிபலித்துக்கொண்டிருக்கின்றது.

'நல்ல விதை பெரும்பாலும் வெளிப்படையாக 'வழியருகே' விதைக்கப்பட்டது, பல சந்தர்ப்பங்களில், 'அது மிதிக்கப்பட்டது' அல்லது 'வானத்துப் பறவைகள் அதை விழுங்கின'. இன்றைய கிறிஸ்தவ ஜீவியத்திலும் வசனமாகிய விதை அனுதினமும் விதைக்கப்பட்டுக் கொண்டேதான் இருகின்றது ஆனால் அதின் பலன் அது விதைக்கப்படும் இடத்தைப் பொறுத்தே அமைகிறது.

'திசை தெரியாமல் திகைக்திருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்' என்ற நோக்கத்தோடு பயணித்து வருகின்றது கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் எனவே வாசகர்கள் மற்றவர்களுக்கு இதழை அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, புதுப்பிக்காதவர்கள் மாத சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். இதழுக்காக நன்கொடை சந்தா விபரம் இதழின் உள்ளே கொடுக்கப்பட்டுள்ளது பயன்படுத்திக்கொள்ளவும்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலக மற்றும் அருங்காட்சியகம் கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. வரும் மே மாதம் திறப்புவிழாவை கொண்டாட திட்டமிட்டுள்ளோம். தேவைகள் அதிகம் தொடர்ந்து நன்கொடையினால் தாங்கவும், ஜெபிக்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பராபரனின் பணியில்

*Manna Selvakmuar*


**மன்னா செல்வகுமார்**
ஆசிரியர்

**சுஜித் ரெக்ஸ்**
வடிவமைப்பு


G Pay

கிறிஸ்தவ **வரலாற்றுச் சுவடுகள்**

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL
A/c Number : 1748 020000 5614
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்" மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள **G-Pay** மூலம் நன்கொடை செலுத்த 90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும் காசோலை மற்றும் வரைவோலை செலுத்த "கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்" ( CHRISTAVA VARALATRU SUVADUGAL ) என்ற பெயரில் எடுக்கவும்

**Contact Us**


**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com



இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு, சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,



+91 9176780001 www.christianhistoricalsociety.in

# துப்புயி அடிகளாரது

## நூல்களின் கலாச்சார பின்புலம்






ராஜ்ஜா
இரு மொழி எழுத்தாளர்
புதுச்சேரி




இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பர் அறிஞர் பெருமக்கள். இலக்கியம் எப்படி காலத்தின் கண்ணாடி ஆகும் என்ற கேள்வி இலக்கியம் வாசிப்போர் மத்தியில் எழத்தான் செய்யும். இருபதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'தி மர்டர் இன் த கத்தீட்ரல்' என்ற கவிதை நாடகத்தை வாசித்து இருப்போருக்குத் தெரியும், அதன் ஆசிரியர் டி. எஸ். எலியட் நம்மை பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு அழைத்துச் சென்று நகமும் சதையுமாய் இருந்த இரண்டாம் ஹென்றி மன்னரும் கேண்டர்பரி கதீட்ரலின் ஆர்ச்பிஷப் தாமஸ் பெக்கட்டும் அதிகாரம் வந்த காரணத்தால் எப்படி எலியும் பூனையுமாக ஆகிப் போனார்கள் என்பதை திறம்பட எடுத்துரைத்திருப்பார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் நடந்த ஒரு சம்பவத்தை இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பின் நம் கண் முன் கொண்டு வந்து காட்டுவதே காலத்தின் கண்ணாடி. ஆங்கிலக் கவிதையின் தந்தை என்று போற்றப்படும் ஜெஃப்ரி சாஸரும் தனது உன்னதமான படைப்பான 'கேண்டெர்பரி டேல்ஸ்' மூலம் 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்களின் நடை உடை பாவனைகளை அழகிய முறையில் சித்தரிக்கிறாரே அதை படிக்கும் போது அந்த நூற்றாண்டுக்குள்ளேயே நடந்து போவதைப் போல ஒரு பிரம்மை ஏற்படவில்லையா! அதுவே காலத்தின் கண்ணாடி. எடுத்துக்காட்டுகளை அள்ளி வீசிக் கொண்டே போகலாம், இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்ற கருத்தைச் சொல்ல.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே பிறந்த லூயி சவினியன் துப்புயி (1806) தனது இருபத்துமூன்றாம் வயதிலேயே குருப்பட்டம் பெற்று (1829) இரண்டு ஆண்டுகளுக்குப் பின், தான் பிறந்து வளர்ந்த தந்தை நாடான பிரான்சு தேசத்திலிருந்து நமது தாய் நாடான இந்தியாவிற்கு கடல் வழி பயணத்தின் மூலம் வந்து சேர்ந்தவர். மறைப்பணி ஆற்ற வேண்டும் என்பது கட்டளை. தமிழ்ப் பணி ஆற்ற வேண்டும் என்பது விதி. விதியை மாற்ற யாரால் முடியும்?

விதியை மாற்ற முடியாமல் தமிழ்ப் பணி செய்து வாழ்ந்து கிடந்த மறைப்பணியாளர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகும். உதாரணத்துக்கு இத்தாலி நாட்டில் இருந்து வந்த இரு பாதிரியார்கள் வீரமாமுனிவரும், ராபர்ட் தி நோபிலியும், இங்கிலாந்து நாட்டில் இருந்து வந்த ஜி. யு. போப் பாதிரியாரும், அமெரிக்க நாட்டில் இருந்து வந்த வின்ஸ்லோ பாதிரியாரும் தமிழ் கூறும் நல் உலகத்தால் நன்கு அறியப்பட்டவர்கள். அந்த வரிசையிலே இடம் பிடிப்பவர் துப்புயி அடிகளார் ஆவார்.

பிப்ரவரி 09, 1832 இல் இந்தியா வந்தடைந்த துப்புயி அடிகளார் பெங்களூரில் எட்டு ஆண்டுகள் இருந்தார். மக்களை சென்றடைய ஒரே வழி அவர்களின் தாய் மொழியிலேதான் என்பதை கருத்தில் கொண்டு எண்பது நாட்களிலேயே தமிழ் கற்று அம் மொழியிலே நல்ல புலமையும் பெற்றார். பிரெஞ்சு மொழியோடு இவருக்கு அத்துபடியான மொழிகள் ஆங்கிலம், கன்னடம், தெலுங்கு.

துப்புயி அடிகளார் புதுச்சேரி வந்தடைந்த போது (1840) ஆண் பிள்ளைகளுக்கு மட்டுமே கல்வி என்ற நிலை இருந்தது. பெண்கள் அறியாமை எனும் இருளிலே மூழ்கடிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்தார். எல்லாம் ஆண் ஆதிக்கத்தால் வந்த வினை என்பதை புரிந்து கொண்டவருக்கு, ஒரு பெண்ணுக்கு கல்விக் கண்ணை திறந்து வைத்தால் ஒரு குடும்பமே கல்வி பயிலும் என்ற எண்ணம் உதித்திருக்க வேண்டும். பெண்களின் முன்னேற்றத்திற்கு முக்கிய தேவை கல்வியே என்ற பேருண்மையை இந்திய திருச்சபைக்கு உணர்த்தியவர் இவர். நாம் வாழும் இந்த 21ஆம் நூற்றாண்டில்தான் பெண்ணியம் பேச ஆரம்பித்திருக்கிறோம். துப்புயி அடிகளாரோ 19ஆம் நூற்றாண்டிலேயே பெண்களுக்கு முக்கியம் கொடுத்து பேசியவர்.

அடிகளாரின் மகத்துவத்தை கண்டு கொண்ட இந்திய திருச்சபை (1844) அவரிடமே முழு பொறுப்பையும் ஒப்படைத்தது. செய்யும் தொழிலே தெய்வம் என்ற கூற்றில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட அடிகளார் முதலில் செய்து முடித்தது தூய இதய மரியன்னையின் பிரான்சிஸ்கன் சகோதரிகள் சபையை 16.10.1844 அன்று நிறுவியதுதான். இது பெண்களுக்கான துறவற சபை.

இறைப் பணிக்காகவே தங்களை முழுமையாக ஒப்படைக்கும் பெண்களால்தான் பெண் பிள்ளைகளுக்கு தரமான கல்வி கொடுக்க முடியும் என்பதில் அடிகளாருக்கு இரு வேறு கருத்து இருந்ததில்லை. சபையை நிறுவிய மறுநாளே (17.10.1844) புதுச்சேரி மிஷன் வீதியில் உள்ள இம்மாகுலேட் பெண்கள் பள்ளியை ஆரம்பித்தார். இப்பள்ளியே இம்மாக்குலேட் சபையின் முதல் கல்வி நிலையம்.

இப்படி இவர் செய்த செயலினால் அனைவருள்ளும்

எழும் முதல் கேள்வி: "பெண்களுக்கு பெண்களால்தான் கல்வி புகட்ட இயலுமா?" இந்தக் கேள்விக்கு துப்புயி அடிகளார் விசுவாச பரப்புதல் சபையின் தலைவருக்கு 18.10.1844 அன்று எழுதிய கடிதத்தில் பதில் கொடுக்கிறார் பாருங்கள்:

'படித்த பெண் தன் பிள்ளைகளுக்கு முதல் ஆசிரியையாயிருப்பாள். இத்தகைய நன்மைகளை கண்கூடாய் பார்க்கின்றோம். இந்து பெண்களிடம் பெண்களேயன்றி மற்றவர்கள் பேச முடியாது. எனவே இத்தகைய நல்ல கத்தோலிக்கப் பெண்கள் இந்து பெண்களுக்கு விசுவாசத்தை அளித்து, அன்பு செய்து சேவை புரிகிறார்கள் என்பது திண்ணம். '

பெண்களுக்கான பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. சபை சகோதரிகள் பாடம் நடத்த தயார். ஆனால் பள்ளிக்கூடத்திற்கு பெண் பிள்ளைகள் வர வேண்டுமே! ஒருவரும் வரவில்லை. எனவே அடிகளாரே புதுச்சேரி சுற்றுப்புறப் பகுதிகளுக்கு சென்று பெண் பிள்ளைகளை சாக்கில் போட்டு கட்டி பள்ளிக்கு தூக்கி வந்திருக்க வேண்டும். இவரால்தானோ என்னவோ 'புள்ளை பிடிக்கிற சாமியார் வராரு' என்று நமது அன்னையர் நமக்கு சோறு ஊட்டும் போது நம்மை அச்சுறுத்தி சாப்பிட வைத்திருக்க வேண்டும்.

புதுச்சேரியில் பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்காக நம் நாட்டிலேயே முதலாவதும் முதன்மையானதுமான நிறுவனத்தை ஏற்படுத்தி பெண்களுக்கு என்றே பெண்களால் பிரத்தியேகமாக ஒரு பள்ளிக்கூடம் திறந்து விட்டு பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு கொண்டுவர அடிகளார் பட்ட கஷ்டங்கள் கொஞ்சம் நஞ்சமா? அத்தோடு பாடம் நடத்தும் கன்னியர்களை பராமரிக்க, பள்ளிக்கூடம் நடத்த பணம் வேண்டுமே. என்ன செய்வார் அடிகளார்! 'தெய்வ பராமரிப்பில் ஒப்படைத்து இருக்கிறேன். இது வீணாகாது. ஏனெனில் இதன் பயனை நான் பலமுறை கண்டடைந்தேன்,' என்று நம்பிக்கை கொள்கிறார்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற கொள்கையை சரியாக கடைப்பிடித்த அடிகளார் முதலில் செய்தது, படித்துக்கொண்டே இருக்கும் ஆசிரியரிடமிருந்துதான் மாணவர் சிறந்த அறிவைப் பெற முடியும், என்பதில் திண்ணமாக இருந்தார். 'உங்களால் இயன்ற மட்டும் அவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் படியாகவும் சரியாய் பிரயாசை படக் கடவீர்கள்' என்றும், 'வாசிப்புமல்லாமல் பிழையற்ற எழுத்தும், கணக்கும், பூமி சாஸ்திரமும், தையல் வேலையும் தக்கவிதமாய் எழுப்பிக்க வேண்டியது' என்று கன்னியாஸ்திரிகளுக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிடுகிறார்.

பாடம் நடத்த திறைமையான கன்னியாஸ்திரிகள் தயார். பாடம் கேட்டு வாழ்க்கையில் முன்னேற பெண் பிள்ளைகளும் தயார். ஆனால் படிக்க புத்தகங்கள் வேண்டுமே. கிடைப்பனவற்றை வைத்து காலத்தை ஓட்டலாம் என்பதில் நம்பிக்கை அற்ற அடிகளார் தானே தேவையான புத்தகங்களை எழுதி, வேண்டிய பிரதிகளை தான் மேலாளராக இருந்து நிர்வகித்த மிஷன் அச்சகத்தின் மூலம் அச்சடித்து வெளியிட்டார். 'தமிழ்ப் பாஷையும் பிரெஞ்சு பாஷையும் படிக்கிறதுக்கு உதவத்தக்க அநேகம் புத்தகங்களையும் உண்டு பண்ணி அச்சில் பதிப்பித்தோம்' என்று தனது 'இல்லற உத்தியானம்' முகவுரையில் அவரே கூறுகிறார். அவர் எழுதி அச்சடித்து வெளியிட்டவைகளில் இலக்கண புத்தகங்களும், அகராதிகளும் அடக்கம். 1841-ல் மேலாளராக இருந்து பணிபுரிய ஆரம்பித்தவர் விண்ணுலகம் செல்லும் வரை (1874) அதாவது 33 ஆண்டுகள் பல நூல்களை அச்சடித்து வெளியிட்டவர்.

வீரமாமுனிவரின் 'பரமார்த்த குரு கதைகள்', 'தேம்பாவணி' போன்ற நூல்கள் அடிகளார் தமது மிஷன் அச்சகத்தில் அச்சிட்டவையே. அவர் எழுதிய 'பூமி சாஸ்திர சங்ஷேபம்' தன் மடத்தாருக்கும், படிக்கும் பெண் பிள்ளைகளுக்கும் பிரத்தியேகமாக வெளிவந்தது. 'பூமி சாஸ்திரத்தில் பிரதான காரியங்கள் நமது பூமி சாஸ்திர நூலதாரத்தில் இந்து தேசத்தைக் குறித்தும் உலோகம் ஐந்து கண்டமாய் பிரிந்திருக்கிறதையும் ஐரோப்பா கண்டத்து பிரதான விவரங்களையும் கற்றுக்கொண்டால் தற்காலத்திற்குப் போதும், என்று சொல்கிறார்.

கதைகள் மூலமே பல நல்ல கருத்துக்களை மாணவர் மனதிலே பதிய வைக்க முடியும். நமது நாட்டு கலாச்சாரமும் அதுவே. கதை சொல்லிகள் சாதிக்காத விஷயமே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும். ஒவ்வொரு நொடியையும் உபயோகமாக செலவழிக்கச் செய்திருக்கிறார்கள். நம் சிந்தனையைத் தூண்டி விட்டு இருக்கிறார்கள். அறிவிலியையும் அறிவாளியாக்கி இருக்கிறார்கள். மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும் என்றும் இப்படியெல்லாம் வாழக்கூடாது என்றும் கதை சொல்லிகள் அறிவுறுத்தி இருக்கிறார்கள்.

துப்புயி அடிகளார் தான் புதுச்சேரியில் கேட்டு ரசித்த செவிவழி கதைகளுக்கு எழுத்து வடிவம் கொடுத்து பாதுகாத்துக் கொடுத்ததுதான் 'கதா மஞ்சரி' (1842 ) எனும் நூல். அடிகளார் மட்டும் அதை செய்யாமல் போயிருந்தால் அவை அழிந்தே போயிருக்கும். இந்த நூலில் உள்ள 78 கதைகளும் படிப்பவரின் மனதில் இடம் பிடித்து அவரை சிந்திக்க வைக்கும். 'சிந்திப்பவரே சிறந்த மனிதர்' ஆகிறார்.

இதேபோல் 'தருமம் எங்கினும் தலை தனைக் காக்கும்', 'தீங்கு செய்யாமை செய் பெரு நன்மை', போன்ற வாசகங்கள் 12 எழுதி, படிக்கும் பிள்ளைகளை சிந்திக்க வைத்து செயல்பட வைத்தார். ஒவ்வொரு வாசகத்தை பற்றியும் ஒரு புத்தகமே எழுதலாம். இந்த 'ஆதிச்சுவடி ஒழுக்கமாலை' (1844) ஒரு சுரங்கம் என்றும் சொல்லலாம். சுரங்கத்திற்குள் போவோர் தங்கத்தையும் வைரத்தையும் எடுத்து வருவர்.

மடத்தில் படிக்க வந்த பெண் பிள்ளைகளுக்கு 'நீதி சாரம்' என்ற ஒரு நூலையும் எழுதினார். மக்கள் மாக்களாக அல்லாமல் மனிதர்களாக வாழ வழி வகுக்கும் சிறிய நூல் இது. தேவ வந்தனம் துவங்கி பிறன் மனை நோக்காமை வரை பல செய்திகளை செம்மையாக சொல்லி வைத்திருக்கிறார் அடிகளார். இந்நூலைப் படிக்கும் போது திருவள்ளுவரின் மறுபிறப்போ அடிகளார் என்று நம் மனதில் ஒரு எண்ணம் எழத்தான் செய்கிறது.

அடிகளார் எழுதி வெளியிட்ட 'நன்றாய் நினை' (1846) இளைய சமுதாயத்திற்கான வழிகாட்டி. மனிதனை

நல்வழிப்படுத்தி சைத்தான் மனிதனுக்கு தாராளமாகவே வழங்கும் துர்புத்தியில் இருந்து மீண்டு உலக வாழ்வினை வாழ்ந்து பின் இறைவனடியை சேர வழிவகுக்கும் சிறு நூல் இது.

'கதைகளை மட்டுமல்ல, கதைகளில் அடங்கியுள்ள பண்பாட்டுக் கருத்துக்களை கவிதைகளாகவும் படைத்திருப்பது அவர் ஒரு பண்பாட்டுக் கவிஞர் என்று அழைக்கப்படும் தகுதி பெறுகின்றார் ' என்று 'கதாமஞ்சரி' ஆறாம் பதிப்பிற்கு அறிமுக உரை எழுதிய ஆ. ச. அந்தோணிசாமி அடிகளார் குறிப்பிடுவது கல்லின் மீது எழுத்தாகிறது.

துப்புயி அடிகளார் எழுதிய பல புத்தகங்கள் அவர் காலத்தில் இருந்த பிரெஞ்சு அரசால் பல பள்ளிக்கூடங்களில் பாடத்திட்டமாக அமைந்திட வழி வகுத்தன. ஆக பெண் கல்வியை புதுச்சேரியில் முறையாக புகுத்தி பெண்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் போக்கில் தமிழன்னைக்கும் தொண்டாற்றியவர்தான் அடிகளார்.

மடத்து பிள்ளைகளுக்கு எழுதிய நூல்கள் இலக்கியச் செல்வங்கள். கிளாசிக் என்றும் அழைக்கலாம். 'கிளாசிக்' என்ற சொல்லுக்கு அறிஞர்கள் கொடுக்கும் விளக்கம் 'எல்லோராலும் விரும்பத்தக்கது' என்பதுதானே! அவர் அத்தோடு நின்றார் இல்லை. வயது வந்தவர்களுக்கும் இரு புத்தகங்கள் எழுதினார். ஒன்று 'இல்லற உத்தியானம்', மற்றொன்று 'துறவற உத்தியானம்'. உத்தியானம் என்பதற்கு தோட்டம் என்பது பொருள். தோட்டம் என்றால் பூத்துக் குலுங்குவது. பூத்துக் குலுங்கும் இடமெல்லாம் கண்களுக்கும் மனதிற்கும் மிகவும் ரம்மியமானதாகவே இருக்கும்.

இருபத்து ஆறு அத்தியாயங்களைக் கொண்ட 'இல்லற உத்தியானம்' இல்லறத்தில் உழலும் மனிதர்களுக்காக எழுதப்பட்டது. கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் உண்டு என்று சொல்வதில் தொடங்கி, ஜோசியம் பார்த்து திருமணம் முடிக்கும் வழக்கத்தை கண்மூடி வழக்கங்கள் எல்லாம் மண் மூடிப் போக என்று சொல்லி, மாமியார் மருமகள் உறவு எலியும் பூனையுமாக இல்லாமல் தாய் மகள் உறவைப் போல இருக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறி, குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒரு முக்கிய அங்கத்தினரே, அவர்கள் ஒவ்வொருவரும் பொறுப்போடு செயல்பட வேண்டியவர்களே என்பதை வலியுறுத்தி, பெண்ணுக்குப் பெண்ணேதான் எதிரி, முக்கியமாக விதவைகள் நமது நாட்டில் படும் பாட்டையெல்லாம் நாசூக்காகச் சொல்லி, மனிதன் இறந்தபின் பேயாகவும் பிசாசாகவும் வாழ்கிறான் என்ற கருத்துக்கு தீயிட்டு எழுதியிருக்கிறார். இப்புத்தகத்தை படிக்கும் போது எப்படி ஒரு துறவியால் இல்லறத்தைப் பற்றி இவ்வளவு அழகாகவும் அற்புதமாகவும் எழுத முடிகிறது என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. மீன் குழம்பு நன்றாக இருக்கிறது என்று சொல்ல சமையல் கலை தெரிந்து இருக்க வேண்டுமா என்ன?

மறை போதகரான துப்புயி அடிகளார் மக்களை சந்தித்து அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதையே கடமையாகக் கொண்டு வாழ்ந்ததால் அவரால் இல்லற உத்தியானத்தை எழுத முடிந்தது.

இல்லறம் வேண்டாம் சந்நியாசமே சிறந்தது என்று மனதார நினைப்பவர்களுக்காக 'துறவற உத்தியானம்' என்ற நூலை எழுதினார். சேசு நாதரில் பிரியமான குமாரத்திகளுக்கு எழுதிய 12. 7. 1869 கடிதத்தில் அவர் யாருக்காக இந்த நூலை எழுதினார் என்று குறிப்பிடுகின்றார். 'விசேஷமாய் நம்முடைய மதத்தார்களைப் பற்றி 'துறவற உத்தியானம்' என்கிற பிரபந்தத்தை துவக்கி இருக்கிறோம் என்று சில விசை கேள்விப்பட்டிருப்பீர்கள். தேவ கிருபையினால் அதில் முதற் காண்டம் முடித்து இப்போது வெளிப்படுத்துகிறோம். ஆன மட்டும் சீக்கிரத்தில் ஒரு பிரதி உங்களுக்கு அனுப்புவோம். நீங்கள் முக்கியமாய் புஸ்தகத்தை வாசித்துக் கொண்டு நல்ல கன்னியாஸ்திரிகளாகறதுக்கு நீங்கள் அனுசரிக்க வேண்டிய புண்ணியங்களை அதிலே கற்றுக்கொண்டு நன்றாய் அனுசரிக்க பிரகாசைப்படுங்கள், உங்களுக்கு எப்போதும் தகுந்த புத்திமதி சொல்லத்தக்கதாகவும் இந்த புஸ்தகத்தை உண்டு பண்ணினோம். அதுவே உங்கள் தகப்பனார் உங்களுக்குச் சொல்லுகிற நல்ல புத்திமதிகளை புறக்கணிக்காமல் சரியாய் அனுசரித்து எப்போதும் சர்வேஸ்வரனுக்கு நல்ல ஊழியம் செய்யுங்கள்'.

மக்களுக்கும் தமிழுக்கும் சேவை செய்வதையே அடிகளார் தலையாய பொறுப்பாக கருதி செயல்பட்டாலும் சைத்தான் அவருக்கு தீரா தலைவலி நோயை கொடுத்து வேலைகளை தடங்கள் செய்தான். 'துறவற உத்தியானம்' இரண்டாம் காண்டம் எழுத முடியுமோ என்னவோ என்ற பயத்திலேயே உழன்றவர்க்கு ஆண்டவர் அருள் புரிந்தார்.

குமாரத்திகளுக்கு எழுதிய 8.5.1872 தேதியிட்ட கடிதத்தில், 'நாம் நமது கிழ வயதிலும் சும்மா இருக்க மாட்டாமல் வியாதியால் சற்றும் கூடிகிறது போது இத் தேசத்தில் சத்தியவேதத்துக்கு நன்மையாகத்தக்க ஒரு பெரிய வேலை துவங்கி இருக்கிறோம். 'நீங்கள் சும்மாயிராமல் மேன்மேலும் புண்ணியத்திலே வர்த்திக்க பிரயாசைப்படுங்கள்'. கொஞ்சத்துக்கு முன்னே நான் உங்களுக்கு அனுப்பிய துறவற உத்தியானத்தின் இரண்டாம் காண்டத்தை நன்றாய் வாசித்து துர்க்குணங்களை எல்லாம் அகற்றிவிட்டு உத்தம கன்னியாஸ்திரிகளாகப் பிரயாசைப்படுங்கள். நல்ல படிப்பினாலும் நல்ல புத்தி மதியினாலும் பிள்ளைகளிடத்திலும் மற்ற பெண் பிள்ளைகளிடத்திலும் பக்தி, தேவசிநேகத்தையும் மற்ற புண்ணியங்களையும் தூண்டி வளர்க்க முயற்சி செய்யுங்கள். "எனக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்" என்று எழுதுகிறார்.

துப்புயி அடிகளார் மூன்று மொழிகளில் - தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் -எழுதிய பல நூல்கள் இன்னும் நமக்கு கிடைக்கப்படாமலே இருக்கின்றன. அடிகளார் மொத்தம் 83 புத்தகங்கள் வெளியிட்டு இருக்கிறார் என்று முனைவர் காப்ரியேல் பிரான்சிஸ் சேவியர் ராஜ் தனது முனைவர் ஆய்வேட்டில் தெரிவித்து இருக்கிறார். துப்புயி உலக மக்கள் பண்பாட்டு இயக்க அமைப்பாளர் அருட்பணி ஆ. ச. அந்தோணிசாமி அடிகளார் தன் கைக்கு கிடைத்த புத்தகங்களை எல்லாம் மறு பதிப்பு செய்ய ஆவன செய்து கொண்டிருக்கிறார். கிடைக்காமல் இருப்பவைகளை எல்லாம் யார் கொண்டு வந்து சேர்ப்பார்? அடிகளாருக்கே வெளிச்சம்.

# இடைச்சிவிளை நல்லம்மாள்புரம் சபை வரலாறு



ஜா. ஜான் ஞானராஜ்




நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களால் உருவாக்கப்பட்ட மூன்றாவது மிஷன் கிராமம் எனும் சிறப்பிடத்தைப் பெறுவது இடைச்சிவிளையையொட்டி 1826 இல் உருவாக்கப்பட்ட மிஷன் கிராமம் நல்லம்மாள்புரம் ஆகும்.

## அமைவிடம்

தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள இடைச்சிவிளை - நல்லம்மாள்புரம் தூத்துக்குடியில் இருந்து தெற்கே சுமார் 80 கிலோ மீட்டர் தொலைவில் திருநெல்வேலி மாவட்ட எல்லையில் உள்ளது. வர்த்தக மையமாகத் திகழும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த தாலுகா தலைமை இடமான திசையன்விளையில் இருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் இக்கிராமம் அமைந்துள்ளது.

## இடைச்சிவிளை கிராம உருவாக்கம்

இடைச்சிவிளை கிராமம் பதினாறாம் நூற்றாண்டிலேயே இருந்திருப்பதை பழமையான ஆவணங்கள் மூலம் பார்க்க முடிகிறது. சேர அரச வழி மரபினரான முக்கந்த நாடார்கள் சேர நாடான வேணாட்டில் இருந்து இடப்பெயர்ச்சி செய்து 1570 இல் மொட்டச்சி மலையில் குடியேறி ஆட்சியாளர்களாக இருந்தனர். பல தலைமுறைகளுக்கு பின் வேணாடு சேர அரச வழி மரபினராகிய இவர்கள் அப்பகுதிக்கு அருகில் அரசூரில் குடியேறினர். அரச மரபினரான முக்கந்த நாடார்கள் இங்கு குடியேறினதாலேயே இவ்வூர் அரசூர் என அழைக்கப்பட்டதாக அறிய முடிகிறது. இந்த குடும்பத்தின் பிரதான முக்கந்தராக காணப்பட்ட சுப்பு முக்கந்தரின் குடும்ப முன்னோர் அரசூரில் இருந்து இடைச்சிவிளையில் குடியேறி

இடைச்சிவிளையின் ஊர் தலைவர்களாக செயல்பட்டனர். 1825 இல் இந்த குடும்பத்தைச் சார்ந்த பெரியவரான சுப்பு முக்கந்தர் எனும் பிரதான முக்கந்தர் கிறிஸ்தவத்தை ஏற்றார். சுப்பு முக்கந்தருக்கு 16 குழந்தைகள் என்பதை அறிய முடிகிறது. சுப்பு முக்கந்தரது வழி மரபில் வந்த யாக்கோபு முக்கந்தர் அவருக்குப் பின் தாவீது முக்கந்தர் என சுப்பு முக்கந்தர் வழி மரபினர் இடைச்சிவிளை ஊர் தலைவர்களாக இருந்துள்ளனர்.

தாவீது முக்கந்தருக்கு ஐந்து பிள்ளைகளும் பெண் பிள்ளைகளாக இருந்ததால் அவருக்குப் பின்னர் சுப்பு முக்கந்தரது மற்றொரு வழி மரபு குடும்பத்தைச் சார்ந்த துரை என்றழைக்கப்பட்ட ஞானக்கண் முத்தையா துரை ஊர் தலைவர் மற்றும் சபை தலைவராக பொறுப்பேற்றார்.

**இடைச்சிவிளை கிராமத்தின் பழம்பெருமை மற்றும் பெயர் காரணம்**

தேரி சார்ந்த கிராமங்களில் இடைச்சிவிளை மிகவும் பழமை வாய்ந்த ஒரு கிராமம். இவ்வூரில் நாடார்களின் குடியேற்றத்திற்கு முன்னர் ஆடு மாடு மேய்த்தல் பணியை செய்து வந்த இடையர் சமூகத்தினர் இங்கு குடியிருந்திருக்கலாம் என்றும் அதன் காரணமாக இவ்வூர் இடைச்சிவிளை என பெயர் பெற்றிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

**தேரி வட்டார அரசியல் குழப்பமும் இடைச்சிவிளையும்**

1700 க்கும் 1800 க்கும் இடைப்பட்ட காலம் தேரி வட்டாரத்தில் அரசியல் குழப்பம் நிறைந்த காலகட்டம். அந்த கால கட்டத்தில் பெரிய பலவேசம், சின்ன பலவேசம் ஆகிய பலவேசம் சேர்வைக்காரர் எனும் மறவர் சமூக சகோதரர்களால் அரசூரில் தங்களுக்குரிய குடி காவல் உரிமை கேட்டு தங்களது மறவர் சமூகத்தினரோடு அவர்கள் போராடிய வேளையில் அந்த இரு சகோதரர்களைச் சார்ந்து நின்றோர் அவர்களை எதிர்த்து நின்றோர் என தேரி வட்டார நாடார் கிராமங்கள் இரு பிரிவாகப் பிரிந்தது. இரு தரப்பாரிடையே இரு சகோதரர்களை ஆதரித்தோர், எதிர்த்தோர் என மானவீரவளநாட்டு (மாநாடு) தேரி வட்டாரத்தில் பெரும் குழப்பமும் கலவரமும் ஏற்பட்டது. தேரி கிராமங்களில் இருந்து மேற்கு நோக்கி அனேகர் இடப்பெயிற்சி செய்தனர். பெரிய பலவேசம் சின்ன பலவேசம் ஆகிய சகோதரர்களை நேரடியாக தைரியமாக எதிர்த்து நின்ற ஒரே கிராமம் அரசூருக்கு அருகில் இருந்த இடைச்சிவிளை ஆகும். அதன் காரணமாக இடைச்சிவிளை கிராமத்தை பெரிய பலவேசம், சின்ன பலவேசம் ஆகிய பலவேசஞ்சேர்வைக்காரர் சகோதரர்கள் தீக்கிரையாக்கினர். இது வரலாற்றில் தீவட்டி கொள்ளை எனப்படுகிறது. அதனால் இடைச்சிவிளை கிராமத்தின் பழமையான ஆவணங்கள் எரிந்து சாம்பலாகிவிட்டது. பலவேசஞ்சேர்வைக்காரர் சகோதரர்களையும் உறுதியாக எதிர்த்து வீர உணர்வும் தைரியமும் மிக்கவர்களாக இடைச்சிவிளை கிராமத்தார் தொடக்க காலம் முதல் காணப்பட்டனர். எதிர்த்து நின்றதில் உறுதியாக இருந்தனர். ஆதலால் வலிமையான கிராமம் எனும் பெயரை இடைச்சிவிளை பெற்றது.

**வில்லுப்பாட்டு வரலாற்று நிகழ்ச்சிகளில் இடைச்சிவிளை**

பெரிய பலவேசம், சின்ன பலவேசம் ஆகிய இரு உடன்பிறந்த பலவேசஞ்சேர்வைக்காரர் சகோதரர்களை எதிர்த்தோரின் இணைந்த செயல்பாட்டால் மாவீரர்களான அவர்கள் இருவரும் கொல்லப்பட்டனர். பலவேசக்காரர் பற்றிய வரலாறு 18 ஆம் நூற்றாண்டில் தேரி வட்டாரங்களில் இருந்து தென் தமிழ்நாடு முழுவதும் பரவியது. வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளில் இச்சம்பவம் பல நூற்றாண்டுகளாக பாடப்பட்டு வருகிறது. அதில் இடைச்சிவிளை கிராமம் குறிப்பிடப்படுகிறது. வரலாற்றாய்வாளர் அ. கா. பெருமாள் 'சேர்வைக்காரன் கதை' நூலில் வரலாற்றையும் வில்லுப்பாட்டு செய்யுளையும் பதிப்பித்துள்ளார் அதில் இக்கிராமம் இடம்பெற்றுள்ளது.

**இடைச்சிவிளையில் கிறிஸ்தவத்தின் தொடக்கம் – SPCK மிஷன் சங்க ஊழியங்கள்**

கி. பி. 1785 முதல் SPCK மிஷன் சங்க மிஷனரிகள் மூலம் இங்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டு வந்தது. திசையன்விளை வட்டாரத்தைச் சார்ந்த சுமார் 60 கரைச்சுற்று கிராமங்களிலும் 1800-1803 க்குட்பட்ட காலகட்டத்தில் திருச்சபை உருவாகி இருந்தது. இடைச்சிவிளையையொட்டி உள்ள கிராமமான தேரிவிளையில் SPCK மிஷன் சங்க மிஷனரிகள் மூலம் இதே காலகட்டத்தில் சபை உருவாகி இருந்தது. தேரிவிளை கிராமம் திருநெல்வேலி திருமண்டலத்தின் தாய் எனப் புகழப்படும் கிளாரிந்தா எனும் குளோரிந்தா அம்மையாருக்கு சொந்தமான கிராமமாக இருந்தது. குளோரிந்தா அம்மையார் அடிக்கடி தேரிவிளை வந்து சபையைக் கண்காணித்து வந்தார்.

SPCK மிஷன் பணி செய்த போது இடைச்சிவிளையில் இரு குடும்பமும் குமரன்விளையில் ஒரு குடும்பமும் கிறிஸ்தவத்தை ஏற்றிருந்ததாக முன்னோர் செவிவழிச் செய்தியாக நல்லம்மாள்புரம் தேவாலயக் கோபுர பிரதிஷ்டை விழாமலரில் (1990) திருமதி. G. D. ஞானசௌந்தரி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**இடைச்சிவிளையில் ஞான ஒளிவு முக்கந்தரால் வாங்கப்பட்ட நிலம் (1821)**

இடைச்சிவிளை பகுதியில் கிறிஸ்தவத்தை ஏற்பவர்களுக்கு அந்த கிராமத்து மக்கள் துன்பம் கொடுத்து வந்ததை அந்நேரம் SPCK மிஷனின் 63 சபைகளுக்கும் பொறுப்பாக இருந்த முதலூர் குருவானவர் கனம். விசுவாசநாதன் ஐயரவர்களும் சமாரியா திருச்சபைத் தலைவர் ஞானஒளிவு முக்கந்தரும் நேரில் கண்டபடியால் எதிர்ப்பின் மத்தியில் கிறிஸ்தவத்தை ஏற்க தீர்மானித்த குடும்பத்தினர் தனியே குடியிருக்கும் பொருட்டு இடைச்சிவிளை கிராமத்தையொட்டி பெரிதானதொரு நிலத்தை 1821 இல் வாங்கி இருந்தனர். உறவினர்கள் மத்தியில் இருந்து பெரும் எதிர்ப்பு கிளம்பியதால் கிறிஸ்தவர்களாக மாற விரும்பியவர்கள் பின்வாங்கினர். அதனால் அந்த நிலம் யாரும் குடியேறாமல் அந்நிலம் தரிசாய் கிடந்தது.

**ரேனியஸின் வருகையும் நற்செய்தி அறிவிப்பும் (1820)**

1820 இல் பாளையங்கோட்டையைத் தலைமை இடமாகக் கொண்ட புதிய CMS பணித்தளத்தின் தலைமை மிஷனரியாக ரேனியஸ் ஐயரவர்கள் பொறுப்பேற்றார்கள். 1820 முதல் அக்கால ஒன்றுபட்ட திருநெல்வேலி திருமண்டலம் எங்கும் குதிரை மீது அமர்ந்து கிராமங்கள் தோறும் பயணம்

செய்து நற்செய்தி அறிவித்து வந்தார்கள். திசையன்விளை, இடைச்சிவிளை, இட்டமொழி கிராமங்களிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் ரேனியஸ் ஐயரவர்கள் நற்செய்தி அறிவித்து வந்தார்கள். ரேனியஸ் ஐயரவர்கள் மற்றும் அவரது உடன் ஊழியர்களான உபதேசியார்கள நற்செய்தி அறிவித்ததன் பயனாக 1820 - 1821 ஆண்டுகளில் இடைச்சிவிளை கிராமத்தைச் சார்ந்த சில குடும்பத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்க தீர்மானித்தனர். ஆனால் அவர்களுக்கு அவர்களது உறவினர்கள் மத்தியில் இருந்து பெரும் எதிர்ப்பு கிளம்பியதால் பின்வாங்கினர்.

**சாத்தான்குளம் சபையார் இடைச்சிவிளையில் நற்செய்தி அறிவித்தல் (1821)**

இடைச்சிவிளையில் நற்செய்தி அறிவிப்பதில் சாத்தான்குளம் திருச்சபையார் முழு முயற்சியை முன் எடுத்தனர், 1821 இல் அவர்கள் மூலமாக 17 குடும்பத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்க முன் வந்து ரேனியஸ் ஐயரவர்களைச் சந்தித்தனர். அவர்களை சோதித்து அவர்கள் உலக நன்மைகளுக்காகவோ, சலுகைகளுக்காகவோ வரவில்லை என்பதை அறிந்து கொண்டபின் ஞானஸ்நான ஆயத்தக்காரராக அவர்களை ரேனியஸ் சேர்த்துக் கொண்டார். பின்னர் ஞானஸ்நானம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது.

**இடைச்சிவிளையில் முப்பது குடும்பத்தினர் கிறிஸ்தவராகுதல் (1825)**

ரேனியஸ் ஐயரவர்களாலும் அவரது உடன் ஊழியரான உபதேசிமார்களாலும் தொடர்ந்து நற்செய்தி அறிவிக்கப்பட்டதன் பயனாக 1825 இல் இடைச்சிவிளையில் 30 குடும்பத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ள முன்வந்தனர். அவர்களை ரேனியஸ் நேரில் சந்தித்தார். உலக நன்மைகளுக்காக இடைச்சிவிளை கிராமத்தார் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ள வரவில்லை என்பதை சோதித்து அறிந்து உறுதி செய்த ரேனியஸ் அவர்களனைவரையும் சபையில் சேர்த்துக் கொண்டார். இடைச்சிவிளையில் CMS சபை உருவானது.

**இடைச்சிவிளை திருச்சபைக்கு 1826 இல் பகைவரால் வந்த துன்பம்**

இடைச்சிவிளையில் CMS திருச்சபை 1826 இல் உருவானதை அறிந்த இடைச்சிவிளை கிராமத்தார் அந்த 30 குடும்பத்தினரையும் துன்பப்படுத்தினர். இதை அறிந்த ரேனியஸ் ஐயரவர்கள் 1826 இல் இடைச்சிவிளை கிராமத்திற்கு வந்து துன்பப்படுத்தியவர்களைக் கண்டித்துப் பேசினார். கிறிஸ்தவர்களைத் தைரியப்படுத்தினார். இடைச்சிவிளையில் ஜெப வீடு கட்டி அதில் காலையிலும் மாலையிலும் ஜெபஆராதனை நடக்கும் படி செய்தார். 1826 இல் இந்த ஜெப வீடு கட்டி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பும் துன்பம் இங்கு நீங்கவில்லை புதிய கிறிஸ்தவர்களுக்கு தொடர்ந்து துன்பத்தை கொடுத்துக் கொண்டே இருந்தார்கள்.

**மிஷன் கிராமம் அமைக்க ரேனியஸ் ஞான ஒளிவு முக்கந்தரிடம் நிலம் வாங்குதல்**

திசையன்விளை சபை தலைவர் ஞான ஒளிவு முக்கந்தர் ரேனியஸை சந்தித்தார் தாமும் விசுவாசநாதன் ஐயரவர்களும் 1821 இல் இடைச்சிவிளையை ஒட்டி புதிய குடியேற்ற மிஷன் கிராமம் அமைக்க நிலம் வாங்கி இருப்பது குறித்தும் அதில் இடைச்சிவிளை மக்கள் குடியேறாததால் அந்நிலம் தரிசாய் கிடப்பது குறித்தும் தெரிவித்தார். அந்த நிலத்தை அவரிடமிருந்து 62 ரூபாய்க்கு CMS மிஷனுக்காக 1826 இல் ரேனியஸ் வாங்கினார். அந்த நிலத்தில் புதிய கிறிஸ்தவர்களைக் குடியேற்றினார். 1829 க்குள் 30 குடும்பத்தினர் படிப்படியாக குடியேறினர். அந்த நிலத்தில் ரேனியஸால் தேவாலயமும் கட்டப்பட்டது.

**இடைச்சிவிளையில் உருவாக்கப்பட்ட மிஷன் கிராமத்திற்கு பெயர் சூட்டுதல்**

இடைச்சிவிளையை ஒட்டி ஞானஒளிவு முக்கந்தரிடம் இருந்து வாங்கப்பட்ட புதிய குடியேற்ற நிலத்திற்கு நல்லம்மாள்புரம் என்ற பெயரை ரேனியஸ் சூட்டினார். அதற்கான பெயர் காரணத்தை ரேனியஸ் தெரிவிக்கவில்லை மிஷன் ரிப்போர்ட்களிலும் குறிப்பிடவில்லை.

**இடைச்சிவிளை நல்லம்மாள்புரம் பள்ளிக்கூடம்**

இடைச்சிவிளை நல்லம்மாள்புரத்தில் ரேனியஸ் ஐயரவர்களால் பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது. 1845 இல் பெண் பிள்ளைகள் மற்றும் தனியே கல்வி பயிலும் வகையில் பெண்களுக்கான பள்ளிக்கூடம் LMS மிஷனரிகளால் தொடங்கப்பட்டுள்ளது எனும் குறிப்பை நல்லம்மாள்புரம் தேவாலயக் கோபுர பிரதிஷ்டை விழாமலரில் (1990) திருமதி. G. D. ஞானசௌந்தரி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**ரேனியஸ் ஐயரவர்களின் நல்லம்மாள்புரம் வருகை (19.09.1832)**

19. 09. 1832 இல் ரேனியஸ் ஐயரவர்கள் இடைச்சிவிளை நல்லம்மாள்புரத்திற்கு வருகை தந்தார்கள். இடைச்சிவிளை நல்லம்மாள்புரம் சபையையும், சபை மக்களையும் அங்கு நடைபெற்று வந்த பள்ளிக்கூடத்தையும் பார்வையிட்டார்கள். சபை மக்களை உற்சாகப்படுத்தினார்கள். கட்டப்பட்டு வந்த தேவாலயப் பணிகளை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்கள்.

**இடைச்சிவிளை நல்லம்மாள்புரத்தின் முதல் தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்படுதல்**

இடைச்சிவிளை நல்லம்மாள்புரத்தில் 1832 இல் கட்டப்பட்டு வந்த புதிய தேவாலய பணிகள் அனைத்தும் அந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நிறைவு பெற்று தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**ரேனியஸ் ஐயரவர்களுக்குப் பின்னர் நல்லம்மாள்புரம் திருச்சபை**

ரேனியஸ் ஐயரவர்களுக்குப் பின்னர் நல்லம்மாள்புரம் திருச்சபை பெற்றிட் ஐயரவர்களது மேற்பார்வையிலும் அதன்பின் 1841 வரை ரேனியஸ் ஐயரவர்களின் மூத்த மகள் கேதரினைத் திருமணம் செய்திருந்த மருமகன் J. J. முல்லர் ஐயரவர்களது மேற்பார்வையிலும் அதன்பின் 1843 முதல் 1851 வரை சார்ஜென்ற் ஐயரவர்களின் மேற்பார்வையிலும் இருந்து வந்தது. சார்ஜென்ற் ஐயரவர்களின் குறிப்புகள் படி 1845 இல் நல்லம்மாள்புரம் திருச்சபையில் 90 குடும்பங்கள் இருந்தன. அதில் உறுதியான விசுவாச குடும்பங்கள் 49.

**LMS மிஷன் ஊழியர்கள் மூலம் குமரன்விளை சபை**

தொடக்க காலத்தில் இடைச்சிவிளை

நல்லம்மாள்புரத்திலும், குமரன்விளை என இரு இடங்களிலும் மண்ணால் கட்டப்பட்டு பனை ஓலையால் மேற்கூரை அமைக்கப்பட்ட தேவாலயங்களில் தனித்தனியாக ஆராதனை செய்துவந்துள்ளார்கள். தென் திருவாங்கூர் நாகர்கோவிலை தலைமை இடமாகக் கொண்ட LMS மிஷன் ஊழியர்கள் மூலம் குமரன்விளை சபை தேவாலயம் மற்றும் பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டுள்ளது. LMS மிஷன் ஊழியர்களே பெண் பிள்ளைகள் மட்டும் படிக்கும் பள்ளிக்கூடத்தை 1845 இல் குமரன்விளையில் தொடங்கியுள்ளார்கள். குமரன்விளையைச் சொந்த ஊராகக் கொண்ட சுவாமிதாசன் உபாத்தியாயர் குமரன்விளை பள்ளிக்கூடத்தை தேவாலயமாக இல்லாமல் பள்ளிக்கூடமாகவே 1850 இல் நடத்தி வந்துள்ளார். LMS மிஷன் சார்ந்த இப்பள்ளி CMS சுவிசேஷபுரம் சேகரத்தோடு 1850 இல் சேர்க்கப்பட்டுள்ளது. சுவாமிதாசன் உபாத்தியாயருக்குப் பின் அவரது சகோதரியின் மகன் ஆபிரகாம் உபாத்தியாயர் குமரன்விளை பள்ளிக்கூடத்தை நடத்தி வந்தார்.

### ஒன்றாக்கப்பட்ட இரு மிஷன் பள்ளிகள்

இரு பள்ளிக்கூடமும் சிறப்பாக நடந்த நிலையில் 1927 க்கும் 1934 க்கும் இடைப்பட்ட காலத்தில் நல்லம்மாள்புரம் சேகர குருவானவர் கனம். இராபர்ட் பீட்டர் ஐயர்வர்கள் இடைச்சிவிளை நல்லம்மாள்புரம் திருச்சபைக்கான மிஷன் சொத்துக்களை தங்கள் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி வந்தவர்களிடமிருந்து தைரியமாகப் போரிட்டு மீட்டு அவற்றைப் பாதுகாப்பதற்காக சில உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அதன் காரணமாக அக்கால இடைச்சிவிளையை உள்ளடக்கிய அரசூர் பஞ்சாயத்து தலைவராக இருந்தவரும் செல்வந்தருமான ஒருவர் மிஷன் சார்ந்த இரு பள்ளிக்கூடங்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடம் ஒன்றை இடைச்சிவிளைக்கு கொண்டு வந்தார். அதன் காரணமாக நமது இரு பள்ளிகளும் பாதிக்கப்பட்டது. பள்ளிக்கூடத்தில் பயிலும் பிள்ளைகளின் எண்ணிக்கை இரு மிஷன் பள்ளிக்கூடங்களிலும் குறைந்தது குமரன்விளை பள்ளிக்கூடத்தை தொடர்ந்து நடத்த இயலாமல் போனது. இரு மிஷன் பள்ளிகளும் ஒன்றாக்கப்பட்டது. குமரன்விளையில் ஆண் பெண் இருபாலரும் கல்வி பயிலும் பள்ளியாக ஆக்கப்பட்டது.

### நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படுதல்

கனம். M. D. இராஜமணி ஐயரவர்கள் காலத்தில் (1953-1955) தொடக்கப்பள்ளியானது நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. அதன் காரணமாக புதிய கட்டிடங்கள் கட்ட வேண்டி இருந்ததால் அதற்காக நல்லம்மாள்புரத்தில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு TDTA குமரன்விளை நடுநிலைப்பள்ளி என்ற பெயரில் அப்பள்ளி செயல்படத் தொடங்கியது.

### தேவாலய கட்டுமானங்கள் – இரண்டாம் தேவாலயம்

1832 இல் ரேனியஸ் அய்யர் அவர்களின் காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவாலயம் 1845 இல் சுமார் 90 குடும்பங்களாக இருந்த சபைக்கு போதுமானதாக இல்லாதபடியால் 1845 இல் புதிய தேவாலயத்திற்கு சுவிசேஷபுரம் வட்டார குருவானவர் அருள்திரு. சார்ஜென்ட் ஐயரவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு 1847 இல் பணி நிறைவு பெற்று பின்னர் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1850 இல் அருள்திரு. சார்ஜென்ட் ஐயரவர்கள் பாளையங்கோட்டைக்கு பனிமாற்றம் செய்யப்பட்டார்கள். ஆனாலும் நல்லம்மாள்புரம் சபையைக் கண்காணித்து வந்தார்கள்

### நல்லம்மாள்புரம் சேகரத்தில் குருவானவர்கள் தங்கி பணி செய்தல்

நல்லம்மாள்புரம் சேகரத்தின் முதல் குருவானவராக 1874 இல் பொறுப்பேற்றவர் கனம். ச. மதுரேந்திரம் சவரிராயன் ஐயரவர்கள். இவர் புகழ் வாய்ந்த வடக்கன்குளம் சவரிராய பிள்ளை உபதேசியாரின் மகன் ஆவார். சவரிராய பிள்ளை நாட்குறிப்பு மற்றும் வம்ச வரலாறு போன்ற எழுத்துப் பிரதி நூல்களை எழுதி அந்த காலகட்டத்தில் நடைபெற்ற சம்பவங்களை தெளிவாக வெளிப்படுத்தியவர் இந்த சவரிராய பிள்ளை உபதேசியார். சவரிராய பிள்ளை உபதேசியார் திசையன்விளை சமாரியா சுவிசேஷபுரம் ஆகிய இடங்களில் சபை ஊழியராக சிறப்பாக பணி செய்தவர்கள் தமது வயோதிப காலத்தில் தமது மகன் கனம். மதுரேந்திரம் சவரிராயன் ஐயரவர்கள் வீட்டில் தங்கி இருந்த போது மரணம் அடைந்தார்கள் நல்லம்மாள்புரம் தேவாலயத்திற்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். திருப்பத்தூரிலும் குற்றாலத்திலும் காணப்படும் கிறிஸ்து குல ஆசிரமத்தின் நிறுவனராகிய பெரியண்ணன் ஏசுதாசன் சவரிராயன் அவர்களுக்கு சொந்த பெரியப்பாவே கனம். மதுரேந்திரம் சவரிராயன் ஐயரவர்கள்.

கனம். மதுரேந்திரம் சவரிராயன் ஐயரவர்கள் குருத்துவ பணியோடு கூட மருத்துவ பணியையும் சிறப்பாக செய்தவர்கள். 1897 வரை இடைச்சிவிளை நல்லம்மாள்புரத்தில் பணி செய்த இவர்கள் மரணம் அடைந்ததும் நல்லம்மாள்புரம் தேவாலய வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டிருந்த தமது தந்தையின் கல்லறைக்கருகில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

### நல்லம்மாள்புரம் தேவாலய கட்டுமானம் – மூன்றாம் தேவாலயம்

வளர்ந்து வந்த நல்லம்மாள்புரம் திருச்சபை மக்கள் அமர்ந்து ஆராதிக்க தேவாலயம் போதுமானதாக இல்லாதபடியால் பழைய தேவாலயம் முற்றிலுமாக அப்புறப்படுத்தப்பட்டு மூன்றாவதாக தேவாலய கட்டுமானம் தொடங்கப்பட்டது சாலமோன் உபதேசியார் மற்றும் கனம். ஞானமுத்து ஐயரவர்கள் காலத்தில் இந்த மூன்றாம் தேவாலயம் கட்டப்பட்டு 07.11.1906 இல் நெல்லை பேராயர் மகாகனம். A. A. வில்லியம்ஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### தேவாலய வளாகத்தில் கிணறு மற்றும் தேவாலய சொத்துக்கள்

1927 முதல் 1934 வரை பணி செய்த கனம். இராபர்ட் பீட்டர் ஐயரவர்கள் காலத்தில் தேவாலய வளாகத்தில் கிணறு அமைக்கப்பட்டது. இடைச்சிவிளை நல்லம்மாள்புரம் திருச்சபைக்கு சொந்தமாக இருந்த மிஷன் சொத்துக்கள் செல்வந்தர்களான ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டன.

### முன் மண்டபம் கட்டப்படுதல்

கனம். தேவசகாயம் ஐயரவர்கள் காலத்தில் (1945-1947) தேவாலய முன் மண்டபம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### சேகர தலைமையிடம் சர்க்கிள் தலைமை இடமாக மாறுதல்

தொடக்க காலம் முதலே சேகர தலைமை இடமாக இருந்த இடைச்சிவிளை நல்லம்மாள்புரம் 1955 முதல் சர்க்கிள் எனப்படும் வட்டார தலைமை இடமாக மாறியது. இடைச்சிவிளை நல்லம்மாள்புரம் முதல் சர்க்கிள் சேர்மன் ஆக கனம். E. P. ஞானசிகாமணி ஐயரவர்கள் பொறுப்பேற்றார்கள்.

### சேர்ப்பின் பண்டிகை தொடங்கப்படுதல்

கனம். E. P. ஞானசிகாமணி ஐயரவர்கள் காலத்தில் (1955-1961) திரு. J. தேவாசீர்வாதம் உபதேசியார் சபை ஊழியராக பணி செய்து வந்தார்கள். கனம். E. P. ஞானசிகாமணி ஐயரவர்கள் காலத்தில் சர்க்கிள் தலைமை இடமாக நல்லம்மாள்புரம் உயர்த்தப்பட்டதால் நல்லம்மாள்புரம் சர்க்கிளின் சேர்ப்பின் பண்டிகை கனம். E. P. ஞானசிகாமணி ஐயரவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்டது மற்றும் இக்காலத்தில் தேவாலயம், குருமனை, சபை ஊழியர் இல்லம் (மிஷன் வீடு) அனைத்திற்கும் மின் இணைப்பு பெறப்பட்டது.

### தேவாலய பழுது பார்க்கும் பணி மற்றும் புதிய குருமனை பிரதிஷ்டை

கனம். G. ஜெயராஜ் ஐயரவர்கள் காலத்தில் (1961-1967) தேவாலய மேற்கூரை நாழி ஓடுகள் மாற்றப்பட்டு புதிய ஓடுகள் போடப்பட்டது. கனம். V. D. ஆபிரகாம் ஐயரவர்கள் (1967-1971) காலத்தில் தேவாலய பழுது பார்க்கும் பணி முழுமையாக நடைபெற்றது. இக்காலத்தில் தேவாலயத்தின் ஓடுகளிலான மேற்கூரை அகற்றப்பட்டு சிமெண்ட் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் மேற்கூரை போடப்பட்டது. தேவாலய சுவர்கள் முழுமையாக கொத்தி பூசப்பட்டது. கனம். M. P. தவமணி ஐயரவர்கள் காலத்தில் (1971-1978) அப்பணி நிறைவுபெற்றது. அப்போது நல்லம்மாள்புரம் தேவாலயம் 14.12.1971 அன்று நெல்லை பேராயர் மகாகனம் தாமஸ் எஸ். காரட் அவர்களால் மறுபிரதிஷ்டை செய்யப்பட்டது. புதிய குருமனை M. P. தவமணி ஐயரவர்கள் காலத்தில் கட்டப்பட்டு கனம். S. T. பால் ஞானையா ஐயரவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### பாடகர் குழு தொடங்கப்படுதல்

கனம். M. P. தவமணி ஐயரவர்கள் காலத்தில் (1971-1978) பாடகர் குழு இங்கு தொடங்கப்பட்டது.

### ஆலயத் தரை தளம் பிரதிஷ்டை

ஆலயத் தரை தளம் சபையைச் சார்ந்த திரு. V. S. ஜெயபாண்டியன் அவர்களது உதவியால் மொசைக் தளமாக்கப்பட்டு 12. 4. 1987 இல் நெல்லை பேராயர் மகாகனம். ஜேசன். S. தர்மராஜ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### தேவாலயக் கோபுரக் கட்டுமானமும் பிரதிஷ்டையும்

நெல்லை பேராயர் மகாகனம். ஜேசன் S தர்மராஜ் அவர்களால் தேவாலய கோபுரத்திற்கு 12.05.1987 இல் அடிக்கல் நாட்டப்பட்டு கோபுரக் கட்டுமானப் பணிகள் 05.06.1989 இல் தொடங்கப்பட்டது. இந்த சபையைச் சார்ந்த பொறியாளர் திரு. S. ஜெயராஜ் அவர்களது தொழில்நுட்ப ஆலோசனையில் கட்டப்பட்ட 90 அடி உயர கோபுரம் 17.05.1990 அன்று சேகர குருவானவர் கனம். பா. கிறிஸ்டோபர் மான்சிங் ஐயரவர்கள் முன்னிலையில் நெல்லை பேராயர் மகாகனம். ஜேசன் S தர்மராஜ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### விரிவாக்கப்பட்ட தேவாலய பிரதிஷ்டை

தேவாலய கோபுரக் கட்டுமானப் பணியின் போது 1990 இல் தேவாலயத்தின் நீளம் 10 அடி அதிகரிக்கப்பட்டது. ஆனாலும் வளர்ந்து வந்த நல்லம்மாள்புரம் திருச்சபைக்கு போதுமானதாக இல்லாதபடியால் 10 இலட்சம் செலவில் மீண்டும் விரிவாக்கம் செய்யவும் ஆல்டரின் இருபுறமும் 20 அடிக்கு 20 அடி விரிவு படுத்த சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. ஆலயத்தின் இருபுறமும் 20 லட்சம் செலவில் பத்து அடி அகலம் விரிவாக்கம் செய்யப்பட்டது. அதன்படி ஆல்டர் மண்டபம் நீங்கலாக தேவாலயம் 62 அடி நீளமும் 46 அடி அகலமும் கொண்டதாக அமையும் என்ற அடிப்படையில் விரிவாக்கப் பணி தொடங்கப்பட்டது. கட்டுமானப் பணியின் தொழில் நுட்ப ஆலோசகராக பொதுப்பணி துறையின் தலைமை பொறியாளராக இருந்து ஓய்வு பெற்ற திரு. S. ஜெயராஜ் அவர்கள் செயல்பட்டார்கள். விரிவாக்கப்பட்ட தேவாலயம் 17.05.2012 அன்று நல்லம்மாள்புரம் சேகர தலைவர் அருள்திரு. R. J. பொன்னுச்சாமி ஐயரவர்கள் முன்னிலையில் தூத்துக்குடி - நாசரேத் திருமண்டல பேராயர் மகாகனம். J. A. D. ஜெபச்சந்திரன் அவர்களால் மறு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### சபையார் எண்ணிக்கையில் நல்லம்மாள்புரம் சபையின் வளர்ச்சி

1930 இல் நல்லம்மாள்புரத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்களின் எண்ணிக்கை 198, பரி. நற்கருணைக்காரர்களின் எண்ணிக்கை 90, 1956 இல் நல்லம்மாள்புரத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்களின் எண்ணிக்கை 358, பரி. நற்கருணைக்காரர்களின் எண்ணிக்கை 182, 1970 இல் நல்லம்மாள்புரத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்களின் எண்ணிக்கை 463, பரி. நற்கருணைக்காரர்களின் எண்ணிக்கை 255, 2002-2003 இல் நல்லம்மாள்புரத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்களின் எண்ணிக்கை 557, பரி. நற்கருணைக்காரர்களின் எண்ணிக்கை 361.

### தற்போதைய நல்லம்மாள்புரம் சபை

நல்லம்மாள்புரம் சபையின் சபை ஊழியராக திரு இம்மானுவேல் அவர்களும் நல்லம்மாள்புரம் சேகர தலைவராக அருள்திரு. ரெனால்ட் பாஸ்கரன் ஐயரவர்களும் பணி செய்து வருகிறார்கள்.


கிறிஸ்தவ
வரலாற்றுச் சுவடுகள்


மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

# பாரெங்கும் பேராலயங்கள் 1



சந்திரா மனோகரன், ஈரோடு



கலோன் கதீட்ரல், ஜெர்மனி
COLOGNE CATHEDRAL, GERMANY

ஜெர்மனியின் நான்கு பெரு நகரங்கள் பெர்லின், ஹாம்பர்க், மியூனிக், கலோன். தலைமை கிருத்துவக் கோயில் கலோன் நகரின் மையப் பகுதியில் வானளாவ உயர்ந்து நிற்கிறது. கத்தோலிக்கப் பேராயரின் இருப்பிடமான இது கோதிக் கட்டிடக்கலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கோதிக் கட்டிடக் கலை (GOTHIC ARCHITECTURE) என்பது ஐரோப்பிய கட்டடக் கலையின் ஒரு வடிவமாகும். இக்கலை பன்னிரண்டாம் நூற்றாண்டில் பிரான்சில் உருவாகிற்று.

1996 ஆம் ஆண்டு யுனெஸ்கோவினால் உலக பாரம்பரிய தளங்களில் ஒன்றாகத் தெரிந்து எடுக்கப்பட்டுள்ளது. கலோன் பேராலயம் உயர் மறை மாவட்டத்தின் தாய் கோவிலாகவும் விளங்குகிறது. ( Seat of the Archbishop of Cologne and of the administration of the Archdiocese of Cologne ).

உலகின் பிரம்மாண்டமான கிறிஸ்தவ தேவாலயங்களில் ஒன்றாக கருதப்படும் கலோன் கதீட்ரல் ரைன் நதிக்கரையில் உள்ள பெருநகரத்தின் அடையாளமாக விளங்குகிறது. இக்கோயில் புனித பேதுரு மற்றும் கன்னி மரியாள் ஆகியோருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஜெர்மன் மொழியில் 'கோல்னர் டோம்' ( Kolner Dom ) என்று அழைக்கப்படும் இப்பேராலயத்தின் கட்டிட வேலைகள் 1248 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் 1880 ஆம் ஆண்டில்தான் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 632 ஆண்டுகள்! ஏழு நூற்றாண்டுகளுக்கு மேலாக பல்வேறு கட்டங்களில் கட்டுமான பணிகள் நிறைவேற்றப்பட்டன.

இந்த ஆலயத்தின் உயரம் 157. 25 மீட்டர் (515 அடிகள்) நீளம் 144. 5 மீட்டர் (474 அடிகள்), அகலம் 86. 25 மீட்டர் (283 அடிகள்). இதன் இரண்டு கோபுரங்களும் 157 மீட்டர் (515 அடிகள்) உயரமானவை. இதன் கட்டுமானப் பணிக்கு சுமார் மூன்று லட்சம் டன் கற்கள் பயன்பட்டதாக ஒரு தகவல்.

நானும் என் துணைவியும் ஜெர்மனிக்கு சென்ற போது என் மகன் கலோன் நகரில் பணியில் இருந்த வேளையில் சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து நடைப்பயணமாக நான்கு நிமிடங்களில் கதீட்ரலை அடைந்து விட்டோம். பிரமாண்டமான இந்த ஆலயத்தின் முகப்பில் நின்ற போது பிரமித்துப் போனோம். இந்த ஆலயத்தில் மொத்தம் பதினோரு மணிகள் உள்ளன. நாள் ஒன்றுக்கு சுமார் 20,000 பேர் வருகை புரிவதாக ஒரு புள்ளி விவரம் சொல்லுகிறது.

இப்பேராலயத்தின் உட்புற அளவு 8000 சதுர மீட்டர். (86 ஆயிரத்து 111 சதுர அடிகள் ) இரண்டாம் உலகப் போரின் போது 1944 ஆம் ஆண்டு நடந்த விமான தாக்குதலால் இத்தேவாலயம் மோசமான சேதத்துக்கு உள்ளானது. இருப்பினும், தொன்மையான கண்ணாடி ஜன்னல்கள் அகற்றப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டது. போர் முடிந்ததும் மறு சீரமைப்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு முந்தைய மகிமையுடன் இன்றளவும் திகழ்கிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆலயமும் அதன் ரெட்டை கோபுரங்களும் வெளிப்புறம் பார்வைக்கு வெளுத்த கருமை நிறத்தில் காணப்படுகிறது. 1850 வரை மிகவும் ஒளிர்ந்த இந்த கதீட்ரல் முழுமையாக கருமை நிறத்தில் மாற 50 ஆண்டுகள் மட்டுமே ஆகியிருக்கிறது. அதற்குக் காரணம் பல நூற்றாண்டுகளாக கரிய புகைபடிதல் மற்றும் நிலக்கரி எரிப்பிலிருந்து வெளிப்படும் மாசு போன்றவைகளினால் இந்த நிறமாற்றம் ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்கள்.

இந்த ஆலயத்தின் உள்ளே புனித பவுல் அடியாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட உயர் பலிபீடம் உள்ளது. இது ஒரு 'பஸிலிக்கா' (Basilica) வைப் போல் திரித்துவத்தை உள்ளடக்கியது. மூன்று ஞானிகளின் (Relics of Magi) எச்சங்களையும் உள்ளே வைத்திருக்கிறார்கள். இவ்வளவு பிரமாண்டமான 'கோதிக் ஸ்டைல்' பேராலயத்தைக் கட்டுவதற்கு அடித்தளமாக அமைத்தது யார் ?

மாஸ்டர் கெர்கார்ட் என்கிற கட்டிடக்கலைஞர் 1248 ஆம் ஆண்டு கலோன் பேராலயத்தின் கட்டுமானப் பணிக்கு வித்திட்ட பெருமைக்குரியவராகிறார். அவர் இந்த கோதிக் பாணி கட்டிடக்கலையில் முதன்மையானவர். அவருடைய அசாத்தியப் பணிதான் கதீட்ரலின் தனித்துவமான இரட்டைக் கோபுரங்களின் வடிவமைப்புக்குக் காரணமாய் இருந்தது. அவர் இப் பேராலயத்தின் அடித்தளத்தை அமைத்திருந்தாலும் இறுதி வடிவத்தைக் காணும் முன்பே மரித்துப் போய்விட்டார்.

எண்ணற்ற சன்னல்கள் வழியே விழுந்து கொண்டிருக்கும் ஒளி வெள்ளத்தில் நனைந்துபோன நாங்கள் 'ஒளியால் கட்டப்பட்டது' போன்ற உணர்வைப் பெற்றோம்.

'பரலோக நகரம்' போல் காட்சியளிக்கும் இத்தேவாலயத்திற்கு ஒரு முறை நீங்கள் உங்கள் பயணத் திட்டத்தை வகுத்து அனுபவியுங்கள்.





# CHS -LIBRARY RESEARCH AND DEVELOPMENT CENTRE

*"Remember the days of old; consider the years of many generations; ask your father, and he will show you, your elders, and they will tell you"*
*(Deut. 32:7 ESVA).*

*We, the People of God are exhorted to keep alive the memory of our faith history and pass it on to our sons and daughters. The Christian Historical Society endeavours to help Tamil-Christian community to fulfill this noble obligation.*

***All praise and glory be to God!***

***Shalom Greetings to you in the name of our Lord and Saviour Jesus Christ!***

*The Christian Historical Society (=CHS) is the fruit of the diligent efforts of numerous Tamil-Christian historians who in the light of Deuteronomy 32:7 seek to document as well as write the faith history of Tamil-Christian community with the active involvement of numerous young volunteers. To cover wider areas where our community has its roots, collaborations are underway with historians and like-minded individuals throughout Tamil Nadu.*

*By God's grace and with prayerful support of Friends, CHS has initiated several activities towards realising its objectives during the past five years since inception. The important ones being:*

- *Publication of the monthly magazine, Kristhava Varalaatru Suvadugal*
- *Reprinting books which contain historical accounts of Tamil-Christian community*
- *Compilation and digitalising of antiquarian texts and documents*
- *Organising Mission Tours to places of historical importance*
- *Establishment of a Library with space for Museum, Research, Seminars etc.*

*Currently, with the benevolent donation of land by a Friend, God has enabled CHS to start the building project for Library cum Research & Development Centre at Surandai. Few individuals are donating and have promised to donate portion of construction material. We need to buy remaining construction material and furnishings for the Library and Seminar Hall.*

*We cordially invite families, individuals and organisations to contribute generously to complete the momentous library building, God willing by May 2025.*

*In God's mission,*

*Manna Selvakumar*
*+91 9176780001*

**Name: Christian Historical Society**

**A/c Number : 1748 020000 4906**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**



# ஓடிப் போனவன்...

தொடர் 5

முனைவர்.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர், திருநெல்வேலி

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத இதழில் இரண்டு ஆண்டுகளாக எழுதி புகழ்பெற்ற ஏமி கார்மைக்கேல் நாவலை எழுதிய நாவலாசிரியர் முனைவர் த ஜான்சி பால்ராஜ் அவர்கள் எழுதும் புதிய தொடார்....**

சுந்தர் சுவாட்சின் சீடர்களுடன் சேர்ந்து விரைவில் கிறித்தவ நெறிமுறைகளைக் கற்றுத் தேர்ந்தான். மிகுந்த ஆர்வத்தோடு சமயப் பணிகளிலும் ஈடுபட்டான். தனிமையை மறந்து ஒரு அழகிய, அன்பான குடும்பம் தனக்கு கிடைத்ததை எண்ணி திருப்தியடைந்தான். அவன் எப்போதும் சுறுசுறுப்பாகவும், மகிழ்ச்சிப் பொங்கவும் நடந்து கொண்டது எல்லோருக்கும் அவன் மீது அலாதி பிரியத்தை ஏற்படுத்தியது.

கிறித்தவத்தின் மீது அவனுக்கிருந்த பேராவல் இயேசுவின் அன்பை மற்றவர்களுக்குப் போதிக்கும் அளவு மிக விரைவில் தேர்ச்சியடைய வைத்தது. சுற்றுவட்டார கிராமங்களுக்கெல்லாம் சென்று பாடல்கள் பாடி, பனையோலையில் எழுதப்பட்ட வசனங்களை விளக்கிக் கூறி அளித்தான். தான் முதல் முறையாகப் பெற்ற தாய் மறந்தாலும் நான் உன்னை மறவேன் என்ற அந்த வசனம் தனக்குள் ஏற்படுத்திய மாற்றத்தை நினைவுகூர்ந்து வாழ்வில் துயரத்தோடு வாழ்பவர்களுக்கு வேதாகம வார்த்தைகளைத் தானே எழுதிக் கொடுத்தான்.

நம்பிக்கை இழந்து வேதனையோடு வாழ்பவர்களுக்கு அதிலிருந்து மீண்டுவரும் வழிகளைப் போதித்தான். அவனது ஒவ்வோரு செயல்களையும் சுவாட்சிடம் சீடர்கள் தினந்தோறும் எடுத்துக் கூறிக்கொண்டே வந்தனர். ஒருநாள் மாலை அவ்வாறு தெருக்களில் பிரசங்கங்களை முடித்துவிட்டு வீட்டிற்குத் திரும்பி வந்தபோது சுவாட்சு ஐயர் சற்று பலவீனமாக ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதை அறிந்து நாளை அவரை சந்தித்துப் பேசலாம் என்ற எண்ணத்தில் அகன்று செல்ல முற்பட்டனர். ஆனால் அவர் அவர்களது தயக்கத்தை அறிந்து அழைத்தார். அவருடன் கோலாப் என்ற அவரது நண்பரான மற்றொரு மிஷனெரியும் இருந்தார். அதுவரை படுத்திருந்த சுவாட்சு அனைவரையும் அமரும்படி கூறி, எழுந்து ஒரு சாய்மானத்தில் சாய்ந்தபடி தானும் அமர்ந்தார். 'இன்று எப்படி போனது நேரம்?' என்றார். வழக்கம் போல ஒன்றுவிடாமல் நடந்தவற்றை ஒப்புவித்து மகிழ்ந்தனர் சீடர்கள். சுந்தர் அவர்கள் கூறுவதை மகிழ்ச்சியொடு கேட்டுத் தலையசைத்துக் கொண்டிருந்தான். அவனது முகத்திலும், பார்வையிலும் பேரானந்தம் நிறைந்திருக்கக் கண்டார் சுவாட்சு. அவனைத் தனது செல்லப் பிள்ளையாகவே பாவித்து நடத்தினார்.

'அது சரி சுந்தர், இன்று உனக்கும், உங்கள் அனைவருக்கும் ஒரு நல்ல செய்தியை வைத்திருக்கிறேன்' என்றார் அவனையே பார்த்தபடி. அவன் எழுந்து நின்று 'சொல்லுங்கள் ஐயா, கேட்கிறேன் ' என்றான் பவ்யமாக. 'இந்த ஒன்றரை ஆண்டில் உனது சுபாவமே எவ்வளவு அழகாக மாறிவிட்டது... ! முதல் நாள் நீ வந்த காட்சி என் கண்முன்னால் இன்றும் நிற்கிறது'. என்றதும் அனைவரும் ஆமாம் என்பதைப் போல் புன் முறுவலோடு அவனையே பார்த்தனர்.

வெண் நிற வேட்டி, சட்டையோடு தலையில் முண்டாசும் கட்டி அழகேறி, புதிய மெருகேறிய அவனது பேச்சும், பார்வையும் அறிவு மிடுக்காகியிருந்தது. ஆனால் அவனது இயல்பான தாழ்மையும், அறிவார்ந்த பணிவும் மாறவேயில்லை. அதுதான் அனைவருக்கும் அவன்மீது பெருத்த அன்பையும்

ஒருவித ஈர்ப்பையும் ஏற்படுத்தியிருந்தது. 'சுந்தர் நீ நாளையே நமது கோலாப் ஐயர் மூலம் ஞானஸ்தானம் பெறப் போகிறாய்' என்றார்.

அவன் மகிழ்ச்சியில் திழைத்து கைக்கூப்பியபடியே முழுங்கால் படியிட்டு கண்களை மூடி திக்கற்ற என்னை தம்கனாய் ஏற்று ஆதரித்த என் கர்த்தாவே உமக்கு ஸ்தோத்திரம் என்று சத்தமாய் கூறினான். அவனது கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது. எல்லோருடைய கண்களிலும் கண்ணீர் துளிர்த்தது. கோலாப் அவன் தோள்களைத் தட்டிக் கொடுத்து அணைத்துக் கொண்டு அவன் அருகிலேயே அமர்ந்தார். சுவாட்சு கட்டிலிலேயே சாய்ந்து அமர்ந்திருந்தார். அவரது உடல்நிலை சரியில்லாமல் இருந்தது.

'சுந்தர் நமக்கு மட்டுமல்ல கர்த்தருடைய இதயத்திற்கும் மிகவும் பிடித்தமானவன் என்று அறிகிறேன். பரிசுத்த வேதாகமத்தில் தாவீது என்ற அரசனைக் கர்த்தரின் இருதயத்திற்கு ஏற்றவன் என்று நாம் அறிந்திருக்கிறோம். எனவே தான் சுந்தருக்கு தாவீது என்ற பெயரை ஞானஸ்தான பெயராக சூட்ட வேண்டும் என்று உணர்கிறேன்' என்றார்.

சுந்தரின் முகம் மேலும் மலர்ந்தது. 'எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது ஐயா. இந்தப். பெயரைப் பெருவதற்கு நான் எம்மாத்திரம்?' என்றான். 'கர்த்தர் தமது அளவற்ற அன்பினால் நம்மை எல்லாவற்றிற்கும் தகுதி ஆக்குகிறார். சுந்தர் தின்னவேலி ஜில்லாவை பூர்வீகமாகக் கொண்டவன் என்பதில் எனக்கு இன்னும் கூடுதல் மகிழ்ச்சி.

எனக்கு தின்னவேலி என்றாலே அங்கு கிறிஸ்துவுக்கு மிகவும் சாட்சியாக வாழும் நல்ல பெண் ஒருத்தி நினைவுக்கு வருவாள். அவளது பெயர் கிளாரிந்தாள். நீங்களும் அந்தப் பெயரை கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். அவள் கடவுளுக்கு மிகவும் பிரியமானவள். அவளைப் பற்றின முழு விசயமும் உங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. நான் இதுவரை யாரிடமும் அதைச் சொன்னதில்லை.' என்றார்.

சுந்தர் திருநெல்வேலி என்றதும் நிமிர்ந்து அவரைப் பார்த்தான். அந்தப் பெண்ணைப் பற்றி மேலும் அறிய ஆர்வம் காட்டினான். மற்றவர்களுக்கும் கிளாரிந்தாள் என்ற பெயரைச் சுவாட்சு சில முறை கூற கேட்டிருந்தாலும் அவர் மேலும் ஏதோ சொல்ல வருகிறார் என்றதும் எல்லோருடைய கவனமும் அதைக் கேட்கும் ஆவலில் அவர் பக்கம் திரும்பியது. எப்போதுமே வேதாகமத்திலுள்ள செய்திகளையும் அது சார்ந்தவற்றையும் பற்றின உபதேசங்களுக்காகவும் மட்டுமே அவரிடம் கூடிவருவர். ஆனால் இப்போது ஒரு பெண்ணைப் பற்றின செய்தி என்றதும் ஒருவித புத்தாவலால் அனைவரும் நிறைந்தனர்.

'அந்த கிளாரிந்தா என்ற பெண் இந்த தஞ்சையில் பிறந்து வளர்ந்தவள் தான். அரச பரம்பரையைச் சார்ந்தவள். அவளது முந்தின பெயர் கோகிலா. சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அவள் இங்கிருக்கும் போதே எனக்கு அவளைத் தெரியும்.' என்றதும் வியப்போடு அனைவரும் அவரை ஏறிட்டுப் பார்த்தனர்.

'ஆமாம்.. . ஆனால் முதலில் எனக்கு அதெல்லாம் நினைவில் இல்லை. ஆனால் இப்போது பத்தாண்டுகளுக்கு முன்பு தின்னவேலியில் ஒரு திருமணத்தை நடத்திவைக்க அங்கு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அங்கு சென்ற இடத்தில் அதே பெண் என்னிடம் வந்து தனக்குத் திருமுழுக்குத் தரும்படி விரும்பி கேட்டாள்.

அங்கு அவள் நிறைய நற்காரியங்கள் செய்வதையும் கண்டேன். ஏழை எளியவர்களைத் தேடிச் சென்று உதவுவதையும், இயேசுவை அவர்களுக்கு அறிவிப்பதையும் கண்டு அதிசயித்தேன். அத்தோடு மட்டுமல்ல எல்லோரும் கல்வி கற்பதற்கு ஒரு பள்ளியையும் ஏற்படுத்தி அதற்கு ஒரு ஆசிரியரையும் நியமித்து அவருக்கு தானே சம்பளமும் அளிக்கிறாள் என்பதை அறிந்து மலைத்துப் போனேன்' என்றதும், 'இந்தியப் பெண் இத்தனைத் தைரியம் உடையவளாக இருக்கிறாள்... அதுவும் சில ஆண்டுகளுக்கு முன்பே.. . !' என்றார் கோலாப்.' அதுமட்டுமல்ல.. . இன்னும் கேட்டால் அதிர்ச்சியடைவீர்கள்.

அவள் ஒரு பிராமணப் பெண். அரச பரம்பரையைச் சார்ந்தவளாயிற்றே.. . ! சாதி வெறி நிறைந்த இந்தச் சமூகத்தில் அப்பெண் எவ்வித சாதி வேறுபாடும் பார்க்காமல் எல்லோரிடமும் சரிசமமாக பழகினாள். அவர்களைத் தனது வீட்டில் அன்போடு வரவழைத்து இயேசுவின் அன்பைப் பற்றியும் சொல்கிறாள். எனக்கு அதை நினைத்தால் மிகுந்த மகிழ்ச்சியாகவும் வியப்பாகவும் இருந்தது. அங்குள்ள மற்றவர்களும் அவளைக் குறித்து நற்சாட்சி பகிர்ந்தார்கள். எனவே அவள் விரும்பி கேட்டபடியே அவளுக்கு ஞானஸ்தானம் கொடுத்தேன்... கிளாரிந்தா என்ற பெயரில்!'

'அதுசரி, அப்போது அவளது குடும்பத்தினரும் அதற்கு தடையாக இல்லையா.. . !?' கோலாப் வியப்பில் கேட்டார். ம்.. . அவளது குடும்ப விபகாரம் மிகவும் நீண்டது. அவள் தஞ்சையைப் பூர்வீகமாக உடையவள் என்றேனல்லவா. ?

அவள் முதலில் என்னிடம் இங்கிருந்த போதே ஞானஸ்தானம் பெற வந்தாள். அப்போது நான் அவளைப் பற்றி தவறான புரிதலில் இருந்திருக்கிறேன் என்று எண்ணும் போது இப்போதும் வேதனையாகதான் இருக்கிறது' என்று நீண்டதொரு சுவாசக் காற்றை வெளியேற்றி அமைதலானார். பின்னர் மீண்டும் பேச ஆரம்பித்தார். 'அந்தப் பெண் ஹென்றி லிட்டில்டன் என்ற ஆங்கிலேய படை அதிகாரி ஒருவருடன் திருமணம் ஆகாமலேயே வாழ்ந்து வருவதாக நான் கேள்விப்பட்டேன். அப்போதெல்லாம் இவ்வாறு நமது ஐரோப்பியர்கள் குறிப்பாக படைவீரர்கள் இந்தியப் பெண்களைத் தங்களது ஆசை நாயகிகளாகப் பயன்படுத்தும் மிக மோசமான நிலை இருந்தது. இவ்வாறு ஒருசிலர் செய்த ஒழுக்கக் கேட்டினால் ஒட்டுமொத்த ஐரோப்பியர்களின் ஒழுக்கமும் குறையானதாகவே இந்தியர்களால் பார்க்கப்பட்டது. !

இது கிறித்தவப் போதனைகளை மக்கள் ஏற்பதற்கும் பெருந்தடையாகவே இருந்தது. இந்நிலையில் தான் நான்

இந்த கிளாரிந்தாவைப் பற்றியும் எண்ணி விட்டேன். எனவே நான் அவள் விரும்பி கேட்டும், ஞானஸ்தானம் அளிக்க மறுத்து விட்டேன். இந்த நிலையில், ஒருமுறை அந்த அதிகாரியே என்னிடம் பேசினார்.. . தான் அவளைத் திருமணம் செய்துக் கொள்ள போவதாகவும், தனது ஆஸ்திகளையெல்லாம் அவளுக்கே அளிக்க இருப்பதாகவும் அவள் மீது தான் கொண்ட உண்மை நேசத்தை எடுத்துரைத்தார். மேலும் தான் சூலை என்று சொல்லப்படும் கடுமையான வயிற்று வலி நோயால் அவதிப் படுவதாகவும் அதற்கு கிளாரிந்தாதான் தன்னை மிகுந்த அன்புடன் கவனித்துக் கொள்வதாகவும் கூறினார்.

அவரது வார்த்தைகளில் உண்மை இருந்ததை உணர்ந்தேன். ஆனாலும் முறைப்படியான திருமணத்தை அவர்கள் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கிருந்தது. இவ்வாறு நாட்கள் கடந்தன. நானும் அந்த சம்பவத்தையே மறந்து போனேன். அதன்பிறகு தான் நான் சுமார் பத்து வருடங்களுக்குப் பிறகு அதே பாளையங்கோட்டைக்கு சென்றிருந்த போது, அவள் என்னிடம் வந்து.. . தன்னை அறிமுகம் செய்து தான் ஏற்கெனவே என்னிடம் திருமுழுக்குக் கேட்ட விபரங்களையெல்லாம் கூறினாள். அத்தோடு தானும் அந்த அதிகாரி லிட்டில்டனும் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூர் பட்டாளத்திலிருந்து பாளையங்கோட்டைப் பட்டாளத்திற்கு மாற்றப்பட்டு விட்டதால் அங்கு வந்ததாகவும் லிட்டில்டன் சூலை நோயுனால் இறந்து போனதாகவும் வேதனையோடு கூறினாள். ' என்றதும்.. . எல்லோர் முகமும் வாடித் தொங்கியது.

'அந்த ஆங்கில அதிகாரியை உண்மையில் பாராட்டியே ஆக வேண்டும். அவளுக்கு தனது அன்போடு இயேசுவின் உண்மையான அன்பையும் சேர்த்தே கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவுக்குள் அவளை வழிநடத்தியிருக்கிறார். அவரும் உண்மை கிறித்தவனாக இருந்திருந்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும் என்பது உறுதி. ஆங்கில பட்டாளத்தார்களுள் மாணிக்கமாகவே அவரை உணர முடிந்தது என்னால். அவளும் ஏதோ சுகபோகமாக வாழ்ந்தோம் முடித்தோம் என்றில்லாமல் உயிருள்ள தேவாதி தேவனாம் இயேசுவை உறுதியாய் பற்றிக் கொண்டாள். தனது கணவனான அந்த லிட்டில்டன் இறந்த பிறகும் அவள் இயேசுவின் அன்பை விட்டு விலகாமல் மற்றவர்களையும் அதே அன்பிற்குள் கொண்டுவர முயல்கிறாள் என்றால் எந்த அளவு அவளுக்குள் அந்த இரட்சிப்பின் உறுதி இருக்க வேண்டும்.. !? ' என்றதும் சுந்தர் தனக்குள்ளாக உணர்ச்சித் ததும்பி சிலிர்த்துக் கொண்டான். நிம்மதி பெருமூச்சை விட்டு தானும் அதே அன்பில் உறுதியாய் இருப்பதாய் ஓர் உணர்வு தீண்டியதை உறுதி செய்துக் கொண்டான்.

'அது சரி ஐயா. அவள் அரச பரம்பரை என்றால் எப்படி பட்டாளத்து அதிகாரிக்கு கிளாரிந்தாள் மனைவியானாள்!?' என்று சீடர்களுள் ஒருவர் கேட்க.. . சுவாட்சு தொடர்ந்தார்.. . !!

**தொடரும்...**


கிறிஸ்தவ **வரலாற்றுச் சுவடுகள்**

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** (CHRISTAVA VARALATRU SUVADUGAL) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

**Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL**

**A/c Number : 1748 020000 5614**

**Bank name : Federal Bank**


**IFSC code: FDRL0001748**



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com



# திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு

## பகுதி 5

ரெமினா சுஜித்

**திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு – பகுதி 5**

முந்தைய மாத பதிவுகளில் நமது திருநெல்வேலி பகுதியில் சீர்திருத்த கிறிஸ்தவம் எவ்வாறு வந்தது என்பதையும் மேலும் நம் அனைவருக்கும் மிகவும் பிரத்தியட்சமான **கிளாரிந்தா** அம்மையாரைப் பற்றியும் சில குறிப்புகளை பார்த்தோம். கிளாரிந்தா தனது வளர்ப்பு மகனை தஞ்சாவூருக்கு அழைத்து வந்தார். அவனை கல்விக்காக ஸ்வார்ட்ஸிடம் ஒப்படைக்க கொண்டு வந்தார். 1784 ஜனவரி இறுதியில் தஞ்சாவூரிலிருந்து புறப்படும்போது அவனை அங்கேயே விட்டுச் சென்றார். அவர் அங்கு ஒரு மாதம் தங்கியிருந்தார். இந்த மாதத்தில் அதன் தொடர்ச்சியை காண்போம்.

மிஷனில் உள்ளவர்கள் ராமநாடு பகுதிக்கு விசுவாசி என்ற உபதேசியாரை (விசுவாசி என்பது அவரது பெயர்) அப்பகுதிக்கு அனுப்பி அங்கு உள்ள நிலைமையை முழுமையாக கண்டறிய முடிவு செய்தார்கள். அங்கு நடந்த நிகழ்வுகள் குறித்து உபதேசியார் விசுவாசியின் குறிப்புகளில் கீழ்க்கண்டவாறுபதிவு செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி (Tinnevelly) பகுதிக்கு விசுவாசி சென்று வந்த பின்னர், தரங்கம்பாடி குருவானவர்களிடம் அளித்த அறிக்கையில்:

ஜனவரி 27, 1784 அன்று கிளாரிந்தா அம்மையார் (Clarinda) இராமநாதபுரம் (Ramnad) சென்றடைந்தார். பின்னர் உபதேசியார் விசுவாசியுடன் ஜனவரி 30 அன்று புறப்பட்டார். முன்பு குறிப்பிடப்பட்ட வண்ணார் சமுதாயத்தை சார்ந்த பிச்சைமுத்து ஒட்டரம்பட்டியில் (Ottarampatti) வசித்து வந்தார். அங்கு விசுவாசி இரண்டு நாட்கள் தங்கினார். பிச்சைமுத்துவின் பல உறவினர்கள் தெற்கே வாழ்ந்து வந்தனர். அவர்கள் அனைவரும் ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தவறுகளை உணர்ந்து சீர்திருத்த திருச்சபையினருடன் (Protestants) இணைய விரும்பினர்.



பாளையங்கோட்டையில் (Palamcottah) கிளாரிந்தா அம்மையார் ஒரு ஜெப ஆலயத்தை கட்டி, **மரியான் சவரிமுத்து** என்பவரை உபதேசியாராக நியமித்தார். மார்ச் 27 அன்று உபதேசியார் விசுவாசி இராமநாதபுரம் திரும்பினார். இதற்கிடையில், ஸ்வார்ட்ஸ் (Schwartz) அவர்களின் உபதேசியார் (Catechist) ஞானப்பிரகாசம் பாளையங்கோட்டைக்கு அனுப்பப்பட்டார். அவர் மார்ச் 7 அன்று பாளையங்கோட்டை வந்தடைந்தார்.

ஒட்டரம்பட்டியில் (Ottarampatti) சுமார் 26 பேர், இளையோர், முதியோர் என அனைவரும் வேதத்தில் உள்ள சத்தியத்தை அறிந்துகொள்ளும்படி அவரை தங்களுக்கு போதனை செய்யும்படி சொன்னனர். அதினால் அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்தார். ஏப்ரல் 19 அன்று மீண்டும் பாளையங்கோட்டையிலிருந்து ஒட்டரம்பட்டி சென்றார். மே 3 அன்று தெரிவிளை (Terivilai) கிராமத்திற்கு சென்றார். **தெரிவிளை கிராமம் கிளாரிந்தாவிற்கு ஒற்றிகை வைக்கப்பட்ட தென் திருநெல்வேலியில் உள்ள கிராமமாகும்.** அங்கு சிலருக்கு

போதனை வழங்கினார். தஞ்சாவூருக்கு திரும்பும் பயணத்தில் மே 16 அன்று மதுரை வந்தடைந்தார். அங்கு பதினைந்து விசுவாசிகளை சந்தித்து நான்கு நாட்கள் தங்கினார்.

ஸ்வார்ட்ஸ் மீண்டும் ஞானப்பிரகாசத்தை திருநெல்வேலிக்கு அனுப்பினார். இம்முறை குருவானவர் ராயப்பனுடன் சென்றார். குருவானவர் ராயப்பன் ஞானப்பிரகாசத்தின் மாமனார் ஆவார். ஜூலை 29 முதல் செப்டம்பர் 23 வரை அவர்கள் அப்பகுதியில் இருந்தனர். ஆகஸ்ட் 11 அன்று குருவானவர் ராயப்பன் தெரிவிளைக்கு சென்றார். ஆகஸ்ட் 29 அன்று, ஒன்பது சாணார் சமுதாயத்தினரும் பதினாறு பறையர் சமுதாயத்தினரும் ஞானஸ்நானம் (Baptism) பெற்றனர்.


செப்டம்பர் 3 அன்று ஒட்டரம்பட்டி சென்று, செப்டம்பர் 8 அன்று பரிசுத்த நற்கருணைக்கான ஆயத்த ஆராதனையை நடத்தினார். 44 பேர் நற்கருணையில் பங்கேற்றனர், இதில் 26 பேர் ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து வந்தவர்கள். குறிப்பாக திருநெல்வேலியில் தேவசகாயம் என்ற ரோமன் கத்தோலிக்கரைப் பற்றி குறிப்பிடுகிறார். அவர் கவிதை இயற்றுவதில் சிறப்பான திறமை பெற்றிருந்தார். புதிய ஏற்பாட்டை வாசிக்க கற்றுக்கொண்டு, ஞானப்பிரகாசத்துடன் அது குறித்து விவாதித்தார்.

குருவானவர் ராயப்பன் மற்றும் உபதேசியார் ஞானப்பிரகாசம் திருநெல்வேலியில் தங்கியிருந்த காலத்தில் **79 ஆத்துமாக்கள் ஞானஸ்நானம் பெற்றனர்** (அனைவரும் ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து வந்தவர்கள்). பிராமண பெண்மணியான கிளாரிந்தா அம்மையார் ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றிருந்தார், அவரது குடும்பத்தில் மேலும் சிலர் ஞானஸ்நானம் பெற்றனர். ஆகமொத்தம் இராணுவப் படையினர் மற்றும் கிளாரிந்தா அம்மையார் உட்பட மொத்தம் 130 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். இவர்கள் அனைவரும் ஒரே இடத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல, பாளையங்கோட்டையைச் சுற்றியுள்ள பல இடங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

**பிப்ரவரி 2, 1785 அன்று ஸ்வார்ட்ஸ் எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:**

**'திருநெல்வேலி திருச்சபையில் பல ஆத்துமாக்கள் உண்மையான மற்றும் களங்கமற்ற எண்ணங்களையும் நோக்கங்களையும் கொண்டிருப்பதால், இப்பணியிலிருந்து நான் விலக முடியாது'.** அங்குள்ள சபைகளின் பராமரிப்பு எனக்கு அதிக செலவையும் சிரமத்தையும் ஏற்படுத்தினாலும், தற்போது நமது திறமையான நல்ல உபதேசியாரான சத்தியானந்தனை அங்கு அனுப்புகிறேன். நூற்றுக்கும் மேற்பட்டோர் கொண்ட சபையை கவனித்துக் கொள்ள அவர் செல்கிறார். . . '

பிராமண பெண்மணி கிளாரிந்தா தற்போது கல்லால் ஆன பெரிய வீடொன்றை கட்டி வருகிறார். சில ஆங்கிலேயர்களும் இதற்கு உதவி செய்கின்றனர். சிறிய ஓலைக் கூரையுடன் சமாளித்துக் கொள்ளலாம் என நான் பரிந்துரைத்தேன். ஆனால் தற்போதைய ஜெப ஆலயம் மிகவும் சிறியதாகவும் வசதியற்றதாகவும் இருப்பதாக அவர் வலியுறுத்தினார். கட்டுமானத்திற்கு நானும் ஏதாவது கொடுக்க வேண்டும் என்றும், மற்றவர்களையும் உதவ ஊக்குவிக்க வேண்டும் என்றும் வேண்டினார்.



இதனுடன் தொடர்புடைய ராயப்பனின் கடிதத்தில், கோட்டையின் தளபதி, கிளாரிந்தாவிடம் தேவாலயத்திற்கான கல்லையும், ஓடுகளையும், உத்திரங்களுக்கான மரங்களையும் கோட்டை வழியாக கொண்டு செல்ல அனுமதி வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்வார்ட்ஸ் ஜனவரி மாத நடுப்பகுதியில் சத்தியானந்தனை பாளையங்கோட்டைக்கு அனுப்பினார். இதன் மூலம் திருநெல்வேலியில் அவரது நீண்ட கால மதிப்புமிக்க பணி தொடங்கியது. அங்கு சிறிது காலத்திற்குப் பின், மற்றொரு உபதேசியாரையும் (Catechist), ஒரு பள்ளி ஆசிரியரையும் அனுப்பினார்.

**இந்த முறை சத்தியநாதன் 1785 ஜனவரி முதல் ஜூன் வரை திருநெல்வேலியில் தங்கியிருந்தார் (தஞ்சாவூருக்கு செல்லும் மற்றும் திரும்பும் பயணம் உட்பட). அவரது நாட்குறிப்பிலிருந்து பின்வரும் தகவல்கள் கிடைக்கின்றன:**

ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களுடன் பல கலந்துரையாடல்களை அவர் மேற்கொண்டார். பிப்ரவரி 4 அன்று தெரிவிளைக்கு சென்றார். அங்கு தெரிவிளை திருச்சபையினர் ஒரு ஜெப ஆலயத்தையும், உபதேசியாருக்கான (Catechist) சிறிய வீட்டையும் கட்டியிருந்தனர். அங்கு சுமார் இரண்டு வாரங்கள் தங்கி, தினமும் இருமுறை விசுவாசிகளை (believers) சபையில் ஒன்று கூட்டினார். பின்னர் எட்டையபுரம் சென்று, பிப்ரவரி 20 அன்று பாளையங்கோட்டைக்கு திரும்பினார். மார்ச் 17 அன்று பாளையங்கோட்டையிலிருந்து ஒரு ஜெர்மன் மைல் தொலைவில் உள்ள ஒட்டரம்பட்டிக்கு சென்று பிச்சைமுத்துவின் மக்களை சந்தித்தார். அங்கு சுமார் முப்பது பேர் இருந்தனர்.

('ஒரு ஜெர்மன் மைல் என்பது சுமார் 7. 5 கிலோமீட்டர் தூரம் ஆகும். இது சுமார் 4. 6 ஆங்கில மைல்களுக்கு சமம். இந்த அளவீடு முறையை பெரும்பாலும் ஜெர்மானிய மிஷனரிகள் இந்தியாவில் பயன்படுத்தினர் என்று குறிப்பிடப்படுகிறது')

அதே ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், ஸ்வார்ட்ஸ் இரண்டாவது முறையாக பாளையங்கோட்டைக்கு வருகை தந்து இரண்டு, மூன்று வாரங்கள் தங்கினார். கிளாரிந்தாவின் சிறிய தேவாலயம் முடிவடைந்திருந்தது. இரண்டு ஆங்கிலேயர்கள் நிதி உதவி செய்திருந்தனர். கோட்டையின் தளபதி சுண்ணாம்பு மற்றும் சில பொருட்களை வழங்கி உதவியிருந்தார். ஜனவரி

மாதம் முதலே கிளாரிந்தா தேவாலயத்தை பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்று ஸ்வார்ட்ஸை வற்புறுத்தி வந்தார். இப்போது அவர் அந்த சிறிய தேவாலயத்தை பிரதிஷ்டை செய்தார் [23/08/1785].




அவரது வருகையின் விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் தஞ்சாவூர் பதிவேட்டில் அவர் சில ஞானஸ்நானங்களை (Baptism) வழங்கியதாகவும், ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து சிலரை ஏற்றுக்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. தஞ்சாவூருக்கு திரும்பிய பின்னர் S. P. C. K க்கு எழுதிய கடிதங்களில் தனது வருகை பற்றி பொதுவான விவரங்களை வழங்கியுள்ளார்.

**அக்கடிதங்களில் ஒன்றில் அவர் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:**

'பாளையங்கோட்டையில் உள்ள திருச்சபை சுமார் 150 உறுப்பினர்களைக் கொண்டது. நம்பிக்கைக்குரியது. முப்பது குடும்பங்கள் உண்மையான தேவ பயத்தைக் கொண்டவர்களாக காணப்படுகினறனர். ஆனால் அங்குள்ள உதவியாளர்கள், திருச்சபையின் தலைவர்களாக இருக்க தகுதி கொண்டவர்கள் அல்ல. அவர்களில் நல்ல நோக்கம் கொண்டவர்கள் என ஒருவரை நம்பலாம், ஆனால் பொதுவாக அவர்களின் வேத அறிவு தெளிவாக இல்லை. வயதானவர்களாக இருப்பதால் முறையான போதனைக்கு பழக்கப்படுவதில் சிரமம் உள்ளது. பாளையங்கோட்டையிலிருந்து நான் இரண்டு 17 வயது இளைஞர்களை அழைத்து வந்துள்ளேன். அவர்களை தேவனின் ஊழியத்திற்கு தயார்படுத்த முயற்சிக்கிறேன்.'

மற்றொரு கடிதத்தில் ஒட்டரம்பட்டி சபையைப் பற்றி குறிப்பிடும்போது, இந்த இளைஞர்களில் ஒருவர் கவிஞர் **தேவசகாயத்தின் மகன் வேதநாயகம்** என்பது தெளிவாகிறது. முன்னதாக தேவசகாயத்தை உபதேசியாராக தயார்படுத்த ஸ்வார்ட்ஸ் எண்ணியிருந்தார் (அவர் ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் உபதேசியாராக இருந்தவர்). ஆண்டின் தொடக்கத்தில் தஞ்சாவூரில் ஐந்து மாதங்கள் வைத்திருந்து பின்னர் பாளையங்கோட்டைக்கு திரும்ப அனுப்பினார். பின்னர் கிளாரிந்தா நியமித்து ஊதியம் வழங்கிய உபதேசியார் மரியான் சவரிக்கு உதவியாளராக பணியாற்றினார். **தேவசகாயத்தின் மகன் வேதநாயகம் பின்னர் கிறிஸ்தவ கவிஞராக புகழ் பெற்றார். இந்திய இசை முறையில் பல 'கீர்த்தனைகள்' அல்லது பாடல்களை இயற்றினார். தற்போது தமிழ் நாடு முழுவதும் பயன்படுத்தப்படும் தமிழ் கிறிஸ்தவ கீர்த்தனைகள் புத்தகத்தில் காணப்படும் பாடல்களில் கிட்டத்தட்ட கால்பங்கு வேதநாயகம் இயற்றியவை.**

**மேற்கூறிய கடிதத்தில், ஸ்வார்ட்ஸ் கிளாரிந்தாவைப் பற்றி விரிவாக எழுதுகிறார்:**

**'பிராமண பெண்மணி என அழைக்கப்படும் அவரை எச்சரித்துள்ளேன். லேசான மனப்பான்மையில் இருந்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்று உறுதியாக அறிவுறுத்தியுள்ளேன். அவர் சொல்லப்படும் அனைத்தையும் ஏற்றுக்கொள்கிறார். அவர் போதகர்களிடம் காட்டும் நடத்தையின் அடிப்படையில் அவரை மதிப்பிட்டால், மிக நன்றாக மதிப்பிடலாம். என் பயணச் செலவுக்காக நூறு ரூபாய் வழங்க முன்வந்தார். நான் அதை ஏற்கவில்லை.'** வசதியான நபராக இருப்பதால் செலவின் ஒரு பகுதியை ஏற்பது நியாயமானது என்று கருதினாலும், தீய எண்ணம் கொண்டவர்கள் அவரை பணம் கொடுத்து எல்லாவற்றையும் சரி செய்துவிட்டார் என அவதூறு பரப்பக்கூடும் என்பதால் நான் ஏற்க முடியாது என்றேன். அவர் கிறிஸ்தவ முறைப்படி நடந்துகொள்வதாக வாக்குறுதி அளித்தார். இதுவரை அங்குள்ள பள்ளி ஆசிரியரை பராமரித்து வந்துள்ளார், ஏழைகளுக்கும் பெரும் உதவி செய்துள்ளார்.'

மிஷன் பதிவுகளில் கிளாரிந்தாவைப் பற்றி ஒரே ஒரு குறிப்பு மட்டுமே மேலும் காணப்படுகிறது. போலே (Pohle) தனது 1792 ஆம் ஆண்டு நாட்குறிப்பில் மே 15 அன்று அவர் தஞ்சாவூர் மற்றும் தரங்கம்பாடி செல்லும் வழியில் திருச்சிராப்பள்ளி வந்ததாகவும், மூன்று நாட்கள் தங்கியதாகவும், சிறிது காலத்திற்குப் பின் தத்து எடுத்த மகனுடன் திருச்சிராப்பள்ளி வழியாக திரும்பியதாகவும் பதிவு செய்துள்ளார்.

**1802 ஆம் ஆண்டளவில் அவரது மரணம் குறித்து கோல்ஹாஃப் மற்றும் ஹார்ஸ்ட் 1808 இல் S. P. C. K க்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது:**




'சில ஆண்டுகளுக்கு முன்பு பாளையங்கோட்டை அருகே ஒரு பிராமண கிறிஸ்தவப் பெண்மணி இறந்தார். அவர் தனது தத்து மகனுக்கும், அவரது மனைவிக்கும் தொகையை விட்டுச் சென்றார். ஆனால் அந்தப் பணம் ஒரு பணக்கார மலபார் மனிதரிடம் இருந்தது, அவரிடமிருந்து அதை பெற அவர்களால் இதுவரை முடியவில்லை.'

**கிளரிண்டாவின் தேவாலயத்தின் பிற்கால வரலாற்றைப் பற்றி சில விவரங்கள்:**

1818 இல் பாளையங்கோட்டையின் சாப்ளின் ரெவரண்ட் ஜேம்ஸ் ஹாஃப் (Rev. James Hough) S. P. C. K க்கு அறிக்கையளித்ததில்:

'இந்த சிற்றாலயம் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது, இருப்பினும் உள்ளூர் திருச்சபையினர் ஞாயிறு மற்றும் திருச்சபையின் பெரிய விழாக்களின் போது இதைப் பயன்படுத்தி வருகின்றனர்.' ஹாஃப் காலத்தில் தேவாலயம் புதுப்பிக்கப்பட்டது. அதன் பிறகு ஆங்கிலேய சபையினரும், இந்திய கிறிஸ்தவ சபையினரும் முறையாக பயன்படுத்தி வந்தனர். 1826 ஆம் ஆண்டுக்கு முன்பு மெட்ராஸ் அரசாங்கம் தேவாலய வளாகத்தைச் சுற்றி புதிய, உறுதியான சுவரை 1174 ரூபாய் செலவில் கட்டியது. 1848 இல் தேவாலயம் மற்றும் வளாகத்தின் உரிமையாளராக இருந்த S. P. G யின் மெட்ராஸ் குழு, பாளையங்கோட்டையில் வசித்த ஐரோப்பியர்களின் உதவியுடன் 277 ரூபாய் செலவில் மீண்டும் தேவாலயத்தை புதுப்பித்தது.

அதே ஆண்டில், மெட்ராஸ் அரசாங்கம் பாளையங்கோட்டையில் 3980 ரூபாய் செலவில் புதிய தேவாலயம் கட்ட அனுமதி அளித்தது. இயக்குநர்கள் குழுவும் இத்திட்டத்தை அங்கீகரித்தது. S. P. G யிடமிருந்து கிளாரிண்டாவின் தேவாலயத்தை 1000 ரூபாய்க்கு வாங்கி, மேலும் 466 ரூபாய் செலவில் நல்ல முறையில் புதுப்பிக்க வேண்டும் என்ற பரிந்துரை பரிசீலிக்கப்பட்டதால் சில ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டது.

இருப்பினும், பாளையங்கோட்டை இராணுவ தளமாகவும் சிவில் தளமாகவும் இருந்ததால், ஒரு அறையை விட சிறப்பான மற்றும் முழுமையான தேவாலயம் வேண்டும் என இயக்குநர்கள் குழு தங்களது முந்தைய முடிவில் உறுதியாக இருந்தது. எனவே புதிய தேவாலயம் கட்டும் பணி தொடர்ந்தது. தற்போதைய கிறிஸ்து தேவாலயம் 1856 இல் பிஷப் டீல்ட்ரியால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதற்காக பாளையங்கோட்டையின் சுவரின் ஒரு பகுதி 817 ரூபாய் செலவில் அகற்றப்பட்டது.

இறுதியாக, 1857 இல் S. P. G யின் மெட்ராஸ் குழு பழைய தேவாலய வளாகத்தை அரசாங்கத்திடம் ஒப்படைத்தது. வளாகத்தை மரியாதைக்குரிய முறையில் பாதுகாக்க வேண்டும் என்றும், வளாகத்திற்குள் உள்ள பழைய சிற்றாலயத்தை சீரழிய விடக்கூடாது என்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

1785 முதல் 1790 வரை எந்த மிஷனரியும் திருநெல்வேலிக்கு வருகை தரவில்லை. ஆனால் சத்தியானந்தன் அப்பகுதியில் நிலையாக இருந்தார். குருவானவர் ராயப்பன் 1789 இல் பரிசுத்த நற்கருணை (Holy Communion) வழங்க வருகை தந்தார், முந்தைய ஆண்டுகளில் ஒன்றிலும் வந்திருக்கலாம்.

உண்மையில், இந்த காலகட்டத்தில் தரங்கம்பாடியின் டேனிஷ் மிஷனும், திருச்சிராப்பள்ளி அல்லது தஞ்சாவூரில் ஸ்வார்ட்ஸின் கீழ் இருந்த 'ஆங்கில' மிஷனும் சேர்ந்து இரண்டு குருவானவர்களை மட்டுமே கொண்டிருந்தன. 1788 இல் குருவானவர் பிலிப் இறந்த பிறகு, குருவானவர் ராயப்பன் மட்டுமே இருந்தார். எனவே, அப்பகுதிகளில் சபையாம் மந்தையை கவனிக்கும் போதகபணி மற்றும் நற்செய்தியை பரப்பும் சுவிசேஷ பணி முழுவதும் உபதேசியார்களின் பொறுப்பில் இருந்தது. குருவானவர் அல்லது மிஷனரி பெரும் இடைவெளிகளில் மட்டுமே சபைகளுக்கு வருகை தந்தனர்.

1790 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், சத்தியானந்தனுடன் பாளையங்கோட்டையில் உபதேசியார் சவரிராயன் பணியமர்த்தப்பட்டதாக ஸ்வார்ட்ஸ் குறிப்பிடுகிறார். **'தரங்கம்பாடியில் கல்வி கற்றவர்; நல்ல அறிவும், போதிப்பதில் சிறந்த திறமையும் கொண்டவர்; உண்மையான கிறிஸ்தவர், ஆனால் உடல்நிலை பலவீனமானவர்'** என அவரை விவரிக்கிறார்.

மேற்கோள் காட்டப்பட்ட கடிதத்தில் ஸ்வார்ட்ஸ் ஊதிய விகிதங்களையும் குறிப்பிட்டுள்ளார்:

'ஒவ்வொரு உபதேசியாருக்கும் சுமார் இரண்டு ஸ்டார் பகோடாக்கள் வழங்குகிறேன், இது மிக அதிகம் அல்ல; மரியாதைக்குரிய ஆடைகளை வாங்க அடிக்கடி கூடுதலாக ஏதாவது கொடுப்பேன். பாளையங்கோட்டையில் உள்ளவர்களுக்கு மாதம் மூன்று பகோடாக்கள் வழங்குகிறேன்.' 1790 இறுதியில் சத்தியானந்தன் குருவானவராக நியமிக்கப்பட்டபோது, அவரது ஊதியத்தை ஐந்து பகோடாக்களாக நிர்ணயித்தார். இது இரண்டு பவுண்டு ஸ்டெர்லிங்கிற்கு சமமானது என குறிப்பிட்டுள்ளார்.

[பகோடா என்பது ஒரு பழங்கால நாணயமாகும், ஸ்டார் பகோடா' என்பது ஒரு குறிப்பிட்ட வகையான பகோடா நாணயத்தைக் குறிக்கிறது, அதில் நட்சத்திரம் போன்ற சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். குறிப்பாக 16 முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை பயன்படுத்தப்பட்ட தங்க நாணயம் ஆகும் அது முக்கியமாக தென்னிந்தியாவில் பயன்படுத்தப்பட்டது]

1786 ஆம் ஆண்டைப் பற்றி எந்த தகவலும் கிடைக்கவில்லை. 1787 மற்றும் 1788 ஆண்டுகளுக்கு திருநெல்வேலி மிஷன் பதிவேடு மற்றும் தஞ்சாவூர் திருச்சபை பதிவேட்டில் உள்ள பட்டியல்களில் மட்டுமே தகவல்கள் உள்ளன. 1787 ஏப்ரல் மாதத்தில், பன்னிரண்டு வேளாளர் சமுதாயத்தினர்கள் உட்பட இருபத்திரண்டு பேர் பாளையங்கோட்டையில் ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து வந்தனர். 1788 இல் பரப்பநாடபுரத்தின் (Parpanadapuram) பள்ளர் சமுதாயத்தினர் ஒரு குறிப்பிடத்தக்க குழுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர், சிலர் ஞானஸ்நானம் (Baptism) பெற்றனர்.

1789 இல் டச்சு குடியேற்றமான தூத்துக்குடி, மணப்பாடு, குலசேகரப்பட்டினம் ஆகிய இடங்களில் ஒரு சுவாரஸ்யமான இயக்கம் தோன்றியது. ஆண்டின் தொடக்கத்தில், தரங்கம்பாடி மிஷனரிகளால் குருவானவர் ராயப்பன் தெற்கு சபைகளை சந்திக்க அனுப்பப்பட்டார். தூத்துக்குடி ஆளுநரின் வேண்டுகோளின் பேரில் அவரது அடிமைகளுக்கும் ஒரு வீட்டு வேலைக்காரருக்கும் போதிக்க சில மாதங்கள் அங்கு தங்கினார்.

இதைச் செய்யும்போது, இந்துக்களிடமும் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களிடமும் பேசி கிறிஸ்துவை பிரசங்கித்தார். பெரும் ஆர்வமும் விவாதமும் எழுந்தது. விரைவில் சத்தியானந்தன் (ஸ்வார்ட்ஸின் அனுமதியுடன்) பாளையங்கோட்டையிலிருந்து வந்து அவருடன் இணைந்தார். ஆளுநர் அவர்களை முழுமையாக ஆதரித்தார், தனது முன்னிலையில் விவாதங்கள் நடத்த ஏற்பாடு செய்தார்.

ஆளுநரின் வேண்டுகோளின் பேரில், குருவானவர் ராயப்பன் பரவர் சமுதாயத்தினரின் தலைவரை அடிக்கடி சந்தித்தார். மெட்ராஸில் தமிழில் அச்சிடப்பட்ட 'போப்பரசின் பிரதிபலிப்பு' (The Mirror of Popery) என்ற சிறு புத்தகத்தையும், கொழும்பில் அச்சிடப்பட்ட 'சத்தியத்தின் வெற்றி' (The Triumph of Truth) என்ற புத்தகத்தையும் படித்து விளக்கினார். சில நாட்டுப்புற ஐரோப்பியர்களும் குருவானவரின் பிரசங்கத்தில் ஆர்வம் காட்டினர். கிழக்கிந்திய கம்பெனியின் ஊழியராக இருந்த மணப்பாட்டைச் சேர்ந்த ஒரு இந்துவின் பரிந்துரையின் பேரில், மே 4 அன்று சத்தியானந்தன் அங்கு அனுப்பப்பட்டார். விரைவில் பலர் கிறிஸ்துவையும் கிறிஸ்தவ போதனைகளைப் பெற தயாராக இருப்பதைக் கண்டார்.

ஜூன் 8 அன்று, குருவானவர் ராயப்பன் தூத்துக்குடியில் பதினாறு மறவர் சமுதாயத்தினர்களுக்கும், எட்டு பிற சமுதாய இந்துக்களுக்கும் ஞானஸ்நானம் (Baptism) வழங்கினார். பதினேழு பரவர் சமுதாயத்தினர்களையும், ஐந்து பிறரையும் ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து ஏற்றுக்கொண்டார். பின்னர் சத்தியானந்தனுடன் இணைய மணப்பாடு சென்றார். தூத்துக்குடியில் இன்னும் கிறிஸ்தவ போதனைகளைப் பெற்று வந்தவர்களை ஒரு டச்சு குருத்துவ மாணவரின் பொறுப்பில் விட்டுச் சென்றார்.

ஜூலை தொடக்கத்தில், குருவானவர் ராயப்பனும் குருவானவர் சத்தியநாதனும் தூத்துக்குடியில் ஒரு பெரிய ஞானஸ்நான ஆராதனை நடத்தினர். 226 இந்துக்களுக்கு ஞானஸ்நானம் வழங்கினர். இதில் 206 பேர் நெசவாளர் சமுதாயத்தை, 93 பேர் மணப்பாட்டைச் சேர்ந்தவர்கள், 60 பேர் குலசேகரப்பட்டினத்தைச் சேர்ந்தவர்கள், மீதமுள்ளவர்கள் மாவட்டத்தின் பிற கிராமங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் 6 சாணார் சமுதாயத்தினர்களும் இருந்தனர். மூன்று நாட்களுக்குப் பிறகு மணப்பாட்டில் இருபத்திமூன்று பேர் ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து வந்தனர், இதில் பன்னிரண்டு பரவர் சமுதாயத்தினர் இருந்தனர்.

குருவானவர் ராயப்பன் ஜூலை 16 வரை மணப்பாட்டில் தங்கியிருந்தார். பின்னர் இன்னும் ஞானஸ்நானத்திற்கும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதலுக்கும் தயாராகி வந்தவர்களை டச்சு குருத்துவ மாணவரிடம் ஒப்படைத்துவிட்டு, பரப்பநாடபுரத்தில் உள்ள விசுவாசிகளை வழியில் சந்தித்துக்கொண்டு பாளையங்கோட்டைக்குப் பயணமானார். தூத்துக்குடி மற்றும் மணப்பாட்டில் துன்புறுத்தல்கள் தொடங்கின. குறிப்பாக ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மீது இவை நடந்தன. அவர்களை சந்தித்து ஊக்குவித்தார். ஆகஸ்ட் இறுதியில் மாவட்டத்தை விட்டு வெளியேறி, வழியில் மீண்டும் தூத்துக்குடி சென்று தரங்கம்பாடி திரும்பினார். ஆனால் உடனடியாக மீண்டும் புறப்பட்டு இராமநாதபுரம் சென்று பத்து நாட்கள் தங்கினார்.

தூத்துக்குடி மற்றும் மணப்பாட்டில் எதிர்ப்பும் துன்புறுத்தல்களும் தீவிரமாகத் தொடர்ந்தன. 1791 இறுதியில், உபதேசியார் ஞானப்பிரகாசம் அவ்வாண்டு ஆகஸ்டில் இராமநாதபுரம் செல்லும் பயணத்தில் சில ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களை சந்தித்ததாக தெரிவித்தார். தூத்துக்குடியில் பெரும்பாலானோர் திரும்பவும் கத்தோலிக்கராக மாற நிர்ப்பந்திக்கப்பட்டதாக அவர்கள் மகிழ்ச்சியுடன் விவரித்தனர். இந்து மதம் மாறியவர்களைத் தவிர, சுமார் இருபத்தைந்து பேர் மட்டுமே ரோமன் கத்தோலிக்கத்திற்கு திரும்ப முடியாதவர்களாக இருந்தனர். ஆளுநர் இவர்களுக்கு ஆதரவு அளித்து வந்தார், ஒரு டச்சு பள்ளி ஆசிரியரையும் நியமித்திருந்தார்.

**1790-91 வரையிலான பணியின் முடிவுகளை கால்ட்வெல் இவ்வாறு தொகுத்துரைக்கிறார்:**

'டச்சு வர்த்தக நிலையங்களை நம்பி வாழ்க்கை நடத்தியவர்கள், இந்த நிலையங்கள் கைவிடப்பட்ட பின்னர் சிலரே தொடர்ந்து உறுதியான கிறிஸ்தவ வாழ்க்கையை மேற்கொண்டனர். உறுதியாக நின்றவர்கள் (மணப்பாட்டைச் சேர்ந்த நெசவாளர்கள்) தாங்கள் குடியேறிய கிராமங்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தை (Christian Faith) எடுத்துச் சென்றனர். ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கையில் பெரிய முன்னேற்றம் காணப்படவில்லை. அவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் கிறிஸ்தவர்களாக உள்ளனர். அவ்வப்போது புதிய கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் நமது சபைகளில் சேர்க்கப்படுகின்றனர். ஆனால் தனித்துவமான சோதனைகளும், சமுதாயத்தின் தனித்துவமான குணாதிசயங்களும் அவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்கின்றன.

நாசுவாஸ் (நாவிதர்) அல்லது நாவிதர்-நெசவாளர்கள் சமுதாயத்தினர் மரபுரீதியாக சாணார் சமுதாயத்தினர்களின் திருமணம் மற்றும் இறுதிச்சடங்குகளில் வீட்டுப் பூசாரிகளாக செயல்படுகின்றனர். இதற்கு சில நன்கொடைகளும் கட்டணங்களும் பெறுவர். இது இந்து மதத்தின் கோட்பாடுகளின் நிலைத்திருப்பதிலும், கிறிஸ்தவர்கள் இந்து பழக்கவழக்கங்களைத் தொடர்வதிலும் நேரடி பொருளாதார நலன் கொண்டவர்களாக்குகிறது. இதனால் கிறிஸ்தவ நேர்மையிலும் ஆர்வத்திலும் வளர்வதைத் தடுக்கிறது.

பதிவேட்டில் குறிப்பிடப்பட்டவர்களின் ஞானஸ்நானம் தொடர்பாக ஒரு விஷயத்தை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இவர்கள் பரந்த நிலப்பரப்பில் சிதறியுள்ள முப்பத்தெட்டு வெவ்வேறு கிராமங்களில் வசித்து வந்தனர். சந்தர்ப்பங்களில் ஒரே நபர் மட்டும் (மனைவி இல்லாத கணவன் அல்லது பிள்ளைகள் இல்லாத தந்தை) பதினாறு வெவ்வேறு கிராமங்களில் ஞானஸ்நானம் பெற்றனர்.

'இங்கு இயல்பாகவே ஒரு கேள்வி எழுகிறது - இந்த நபர்களுக்கு கிறிஸ்துவைப் பற்றியும் கிறிஸ்தவத்தைப் பற்றியும் முறையான போதனை ஞானஸ்நானத்திற்கு முன் வழங்கப்பட்டதா? அவர்களின் பொதுவான குணாதிசயம் அல்லது கிறிஸ்தவராக மாற விரும்பும் அவர்களின் நேர்மை குறித்து திருப்திகரமான சான்றுகள் கோரப்பட்டதா அல்லது பெறப்பட்டதா? ஞானஸ்நானத்திற்குப் பின்னர் முறையான போதனை, ஆராதனையில் பங்கேற்பு, கிருபையில் வளர்ச்சி ஆகியவற்றிற்கு என்ன வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன அல்லது மேற்கொள்ள முடிந்தது?

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டவர்கள் வாசிக்க முடியாத நிலையிலும், நாற்பது கிராமங்களின் மேற்பார்வைக்கு அதிகபட்சம் இரண்டு அல்லது மூன்று உபதேசியார்கள் (Catechists) மட்டுமே இருந்த நிலையிலும், இத்தகைய கேள்விகளுக்கு திருப்திகரமான பதில் கிடைப்பது சாத்தியமற்றதாக தோன்றுகிறது.

இந்த கருத்துக்களில், நான் சத்தியநாதனை குறிப்பாக குற்றம் சாட்டவில்லை. அவர் அக்கால வழக்கத்திற்கும், தனது கடமை என கருதியதற்கும் ஏற்ப செயல்பட்டார். ஞானஸ்நானம் கேட்டு அடிப்படை போதனையை பெற விரும்பிய அனைவருக்கும் விசுவாசத்துடன் ஞானஸ்நானம் வழங்கி, முடிவுகளை தேவனிடம் விட்டார். ஆனால் ஏன் அத்தகைய முடிவுகள் பெரும்பாலும் நிலைக்கவில்லை என்பதை விளக்க நம் ஆண்டவர் கூறிய பின்வரும் சூழ்நிலைகளை குறிப்பிடுகிறேன். **'நல்ல விதை பெரும்பாலும் வெளிப்படையாக 'வழியருகே' விதைக்கப்பட்டது, பல சந்தர்ப்பங்களில், 'அது மிதிக்கப்பட்டது' அல்லது 'வானத்துப் பறவைகள் அதை விழுங்கின.'**

இன்றைய கிறிஸ்தவ ஜீவியத்திலும் **வசனமாகிய விதை அனுதினமும் விதைக்கப்பட்டுக் கொண்டேதான் இருகின்றது. ஆனால் அதின் பலன் அது விதைக்கப்படும் இடத்தைப் பொறுத்தே அமைகிறது.** அன்றையக் காலக்கட்டத்தில் மக்களின் பின்மாற்றத்திற்கு அதாவது கிறிஸ்துவை விட்டு வழி விலகி சென்றதற்கு முக்கிய காரணமாக இருந்தது அவர்கள் பிறக் கோட்பாடுகளை பின்பற்றியதும் ஒரு முக்கிய காரணமாகக் காணப்படுகிறது. வேதம் தெளிவாக கூறுகின்றது 'அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?'. ஆண்டவர் நம்மைப் போல பிறரை நேசித்து அன்புக் கூற கூறுகின்றார் ஆனால் அவர்கள் பின்பற்றும் கோட்பாடுகளை அல்ல. **Love People Not Ideas.**

இவ்வாறு திருநெல்வேலி பகுதியில் கிறிஸ்துவின் நற்செய்தி பரவி மக்கள் கிறிஸ்துவுக்குள்ளாக வந்தனர். சிலர் பின் மாற்றம் அடைந்தனர் ஆனால் குருவானவர்கள் மற்றும் உபதேசியார்கள் தங்களுடைய பணியை உற்சாகமாக செய்து வந்தனர். வருகின்ற பதிவுகளில் சத்தியநாதன் ஐயரவர்கள் மற்றும் மிஷனரி ஜெனிக்கே அவர்களும் திருநெல்வேலி திருச்சபையின் ஆற்றிய பணிகள் பற்றி காண்போம்.

**தொடர்ந்து பயணிப்போம்.. .**


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
90420 15221 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
(CHRISTAVA VARALATRU SUVADUGAL)
என்ற பெயரில் எடுக்கவும்



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com



**ஜே.பர்னபாஸ்**
சேலம் வரலாற்றுச் சங்கம்

# பிஷப் ஹீபர்
## உயிர் நீத்த நினைவுச் சின்னத்தின் பாதுகாப்பில் வரலாற்றுச் சங்கத்தின் முயற்சிகள்

ஏற்கெனவே பிஷப் ஹீபரைப் பற்றியும், புறக்கணிக்கப்பட்டு திருச்சிராப்பள்ளி நீதிமன்ற வளாகத்தில் கேட்பாரற்றுக் கிடக்கும், அவரது உயிர் நீத்த நினைவுச் சின்னத்தைப் பற்றியும், கடந்த ஆண்டு நமது கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் ஜூலை -2024 இதழில் **'பிஷப் ஹீபர் உயிர்நீத்த நினைவுச் சின்னத்தின் இன்றைய நிலை - திருச்சபையின் பாராமுகம்'** என்ற தலைப்பில் எனது கட்டுரையை வாசித்திருப்பீர்கள்; அதன் தொடரும் தொடர்ச்சியே இந்த கட்டுரை. மூன்று துண்டுகளாக உடைந்து, கேட்பாரற்றுக் கிடந்த இந்த கற்பலகை துண்டுகள் இன்று ஒருசிலரின் தேடலுக்கும், கவலைப்படுதலுக்கும், ஏதுவாக விளங்குகிறது. ஏற்கெனவே நான் எழுதின கட்டுரையின் தொடர்ச்சியாக, நமது தொடர் முயற்சிகளின் வெளிப்படுத்தலாக, இந்த எனது எழுத்துக்கள் இங்கே விளங்கும். அநேகரை பாத்திரராக எழுப்பும் எனது, எங்களது முயற்சிகள் விளைந்த பயனை நல்கிவருவது மகிழ்ச்சியைத் தருகிறது.

### பிஷப் ஹீபரின் புகழ் சரிதை:

கல்கத்தாவின் லாட் பிஷப் (Lord Bishop of Calcutta)/ சமஸ்த இந்திய துணைக்கண்டம், பர்மா, இலங்கை, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்காவில் சில பகுதிகள் மற்றும் இந்துமாக்கடல் தீவுகள் கொண்ட அன்றைய உலகின்



மிகப் பரந்த பேராயத்தின் இரண்டாவது பேராயர் இவர் என்பதை இங்கே சொல்லவேண்டும். தனது அகண்ட சமஸ்தானத்தை சுற்றிப் பார்த்து ஆய்வு செய்து, அங்கெல்லாம் வாழும் மக்களின் ஆன்மீக மற்றும் சமுக வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றமடையச் செய்ய அவர் விழைந்த பேராவல்தான் அவரை இந்த இந்திய சுற்றுப் பயணங்களை மேற்கொள்ள உந்தியது. முதல் சுற்றுப்பயணத்தில் வங்காளத்தின் டாக்கா, மத்திய இந்தியாவின் பனாரஸ் என்ற வாரனாசி, அலகாபாத் என்ற பிரயாக்ராஜ், இமயமலைப்பகுதிகள், அல்மோரா, குமான், இவைகளைத் தொடர்ந்து முகலாயர்களின் தலைநகரமான டெல்லி வந்தடைந்த பேராயர் அங்கே அப்போதைய முகலாய சக்ரவர்த்தி இரண்டாம் அக்பர்ஷாவை சந்தித்துப் பேசினார். இந்த பயணங்களில் எல்லாம் அவருக்கு ராணுவ பாதுகாப்பு வழங்கப்படுகிறது. (Given the protection of Armed Troops of Sepoys) இறுதியாக பம்பாய் வந்தடைந்த பேராயர் அங்கிருந்து கடல் மார்க்கமாக இலங்கைத் தீவிற்குச் சென்று, இலங்கை சுற்றுப்பயணத்தை முடித்துவிட்டு அங்கிருந்து மீண்டும் கடல் மார்க்கமாக கல்கத்தா வந்து சேர்ந்தார். வந்து சேர்ந்தவர் தான் கண்ட நிலைமைகளை, கிழக்கிந்திய கம்பெனி நிர்வாக ஆட்சியினர் சுதேச மக்களை நடத்தும் கொடிய முறைகளுக்கும், நிர்வாகச் சீர்கேடுகளுக்கும், சுதேச மக்களைத் தப்புவிக்கும்படிக்கு கவர்னர் ஜெனரலுக்கும், இங்கிலாந்து அதிகார மையத்திற்கும், எழுதினார். மக்கள் நேச செல்வராக அவர் விளங்கினார்.

### இந்தியாவின் தலைநகர் கல்கத்தாவின் இரண்டாவது பேராயர் பெருந்தகை (The Second Lord Bishop of Culcutta):

அப்போது ஆங்கிலேயர்களின் தலைநகராக கல்கத்தா விளங்கியது. இங்கிலாந்தின் நான்காவது ஜார்ஜ் மன்னரால் (King Geroge the Fourth) கல்கத்தாவின் பேராயராக நியமிக்கப்பட்டு, கான்டர்பரி அத்தியட்சரால் லாம்பத் மாளிகையில் திருநிலைப்படுத்தப்பட்ட பேராயர் ஹீபர், இந்தியா வந்ததும், கல்கத்தாவின் பேராயராக அன்றைய இந்தியாவின் கவர்னர் ஜெனரல் லாட் அம்ஹெர்ஸ்ட் (Lord Amherst) அவர்களால் பொறுப்பில் அமர்த்தப்படுகிறார். அன்றைய கல்கத்தாவில் இருந்த புனித ஜான்ஸ் கதீட்ரல் தேவாலயம் தான் அவரது பேராயர் ஆலயமாக விளங்கியது. கல்கத்தாவின் இந்த புகழ்பெற்ற பேராயம் (Holy See of Culcutta) 1814ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

இந்தியாவில் தீவிரமாக செயல்பட்டுவந்த சுவிசேஷ பிரபல்ய சபை (Society for the Propagation of Gospel - S. P. G.), மற்றும் திருச்சபை திருத்தொண்டர் சங்கம் (Church Missionary Society -C. M. S. ) ஆகிய சங்கங்களை பேராயர் ஹீபர் தொடர்ந்து ஆதரித்துவந்தார்.

### கவிஞர் மற்றும் எழுத்தாளராக பிஷப் ஹீபர் :

பாமாலைகளை எழுதுவதில் தலைசிறந்தவராக திகழ்ந்தவர் பிஷப் ஹீபர். அவர் எழுதிய பாமாலைகளில் (Hymns) பல இன்றும் தேவாலயங்களில் பாடப்பட்டு வருகிறது. அவர் எழுதின பாமாலைகளின் தொகுப்பு 'Hymns Written ' என்ற பெயரில் அவரது மரணத்திற்குப் பின்பு 1827 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. பேராயர் பிஷப் ஹீபர் எழுதிய பாமாலைகளில்



தலைசிறந்த சில பாமாலைகள் முத்திரை பதித்தவைகள் என்று சொல்வதைவிட, மக்கள் மனம் கவர்ந்தவை, இன்னும், இன்றும், என்றும், பக்தர்களால் விரும்பிப் பாடப்படுபவை அவை. குறிப்பாக சில பாமாலைகளை இங்கே குறிப்பிடுகின்றேன்.' தூய தூய தூயா சர்வ வல்ல நாதா (Holy, Holy, Holy, Lord God Almighty) இந்த பாமாலை பாடப்படும் போதெல்லாம் பிஷப் ஹீபரை நான் நினைப்பேன். அவரது வாழ்வும், சேவைகளும், கல்வி ஞானமும், கவித்துவமும் என் மனதில் மீண்டும் நிறையும். அதே போல அவர் எழுதிய **'விண் கிரீடம் பெறப் போருக்கு கிறிஸ்தேசு செல்கிறார்'** ( The Son of God goes forth to War) என்ற பாமாலையும் மகிமையும் மாட்சிமையும் தோன்ற எழுதப்பட்டதே. இதைப் போலவே மகிமை விளங்கிய திருநாள் அன்று பாடப்படும் **'விடியற்காலத்து வெள்ளியே தோன்றி கார் இருள் நீக்கத் துணை புரிவாய்'** (Brightest and Best of the Stars) என்ற பாமாலையும் இங்கே சிறப்பாக குறிப்பிடத்தக்கது.

### இப்போது இல்லாவிட்டால் வேறு எப்போது? நீங்கள் இல்லாவிட்டால் வேறு யார்? :

திருச்சிராப்பள்ளியில் பிஷப் ஹீபர் நினைவைப் போற்றி இன்றும் நினைவுகூரத்தக்கதாக பிஷப் ஹீபர் கல்லூரி, மற்றும் இரண்டு மேனிலைப் பள்ளிகளும் இருந்தாலும், தென்னிந்தியத் திருச்சபை திருச்சி தஞ்சை திருமண்டலம் வல்லமையாக செயல்பட்டு வந்திருந்தாலும், இவைகளைச் சார்ந்த யாரும் இதுவரை பிஷப் ஹீபர் உயிர் நீத்த நினைவுச் சின்னத்தின் பாதுகாப்பிற்காக குரல் கொடுக்கவில்லை என்பதும், எந்த ஒரு முயற்சிகளையும் எடுக்கவில்லை என்பதும் ஏனோ



தெரியவில்லை. அவர்கள் அனைவரும் பிஷப் ஹீபரை அநேகமாக மறந்தே போனார்கள், பல்லாயிரம் தேவ ஜனங்களும், படித்தறிந்த கிறிஸ்தவர்களும், உயர் பதவிகளில் உள்ளவர்களும், சில கிறிஸ்தவத் தொண்டு அமைப்புகளும், ஏன் எதுவும் செய்யவில்லை? பகற்காலமான இக்காலத்திலே நாம் இப்படி இருந்தால், செயல்படக் கூடாத இராக் காலத்தில் என்ன செய்வோம்?

**பிஷப் ஹீபரின் இரண்டாவது பயணமும் மரணமும் :**

தென்னிந்தியாவில் அப்பொழுது நிலவி வந்த சாதீய கொடுமைகள், சாதி வித்தியாசம், தீண்டாமை, முதலியவற்றால் அடித்தட்டு மக்கள் சொல்லொண்ணா கஷ்டங்களை, தீமைகளை, அனுபவித்து வந்தனர். அவர்களின் கூக்குரல் உயர்த்தப்படாமல் சாதீயத்தோடு சமரசப் போக்கைக் கைகக்கொள்பவர்களால் பார்த்துக் கொள்ளப்பட்டது. இந்தத் தீமைகள் எல்லாம் கிறிஸ்தவத் திருச்சபைகளுக்குள்ளும் பிரிவினைகளை, சாதி வித்தியாசங்களை, ஏற்படுத்தி வந்தது. இதனை அறிந்து கொண்ட பிஷப் ஹீபர் இந்த சாதீய தீமைகளை வேரறுத்து திருச்சபையை சமுதாயத்தை மீட்டெடுத்து கிறிஸ்துவின் ஒன்றிணைப்பில் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைக்கவே இந்த இரண்டாவது பயணத்தை துவக்கினார். தென்னிந்தியாவின் மெட்ராஸ் என்ற சென்னை, பாண்டிச்சேரி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவாங்கூர் சமஸ்தானம் ஆகிய பகுதிகளுக்குச் செல்ல திட்டம் வகுத்து புறப்பட்டு வந்தவர் திருச்சிராப்பள்ளியிலே தனது மரணத்தைச் சந்திக்கும்படி நேர்ந்தது. திருவாங்கூருக்கும், பின்னர் இலங்கைத் தீவிற்குச் செல்லவும், எண்ணியிருந்தார் என்றும் தெரிகிறது.

திருச்சிராப்பள்ளியிலே திருச்சபைத் தலைவர்களையும், சுதேச தலைவர்களையும் சந்தித்துப் பேசினார். இந்தியர்களின் கல்வி முன்னேற்றத் திட்டங்களையும் அதற்கான முன்னெடுப்புகளையும் அதிகாரிகளுடன் ஆலோசித்தார். 03-04-1826 அன்று திருச்சிராப்பள்ளி சுவார்ட்ஸ் நினைவு சிற்றாலயத்தில் (தற்பொழுது கோட்டை கிறிஸ்துநாதர் ஆலயம்) கூட்டம் அதிகமாக இருந்ததால் திறந்தவெளியில் ஆராதனை நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் பேசிய பிஷப் ஹீபர் சாதீய வேற்றுமைகளை விட்டொழிக்கும்படி கிறிஸ்தவ சபையினரைக் கேட்டுக் கொண்டார். சாதி வேற்றுமைகளின் தீமைகளை விட்டொழித்து, சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்படி அனைவரையும் கேட்டுக் கொண்டார். இதுவே அவரது இறுதிப் பேருரையாக அமைந்து விட்டது. வெயிலின் கொடுமை அவரைத் தாக்கியதால் ஏற்பட்ட களைப்பினால் தான் தங்கியிருந்த நீதிபதி ஜான் பேர்ட் (Justice John Bird) இல்லத்திற்கு விரைந்த அவர், அங்கிருந்த குளியல் குளத்தில் சோர்ந்து களைப்படைந்த நிலையிலே இறங்கியதால், அவர் நிலைகுலைந்து இறந்துபோனார். இப்படியாக அவர் உலக வாழ்வை நீத்து, நீங்கா புகழ் உலகு எய்தினார்.

**பிஷப் ஹீபர் உயிர் நீத்த நினைவுச்சின்னம்:**

1882ஆம் ஆண்டு பிஷப் ஹீபரின் மறைவிற்கு 56ஆண்டுகளுக்குப் பின்னர், அவர் உயிர் நீத்த அந்த குளம் கண்டறியப்பட்டு, அது பழுதுபார்க்கப்பட்டு அதன் அருகே ஒரு நினைவுச் சின்னம் அன்றைய ஆங்கிலேய அரசாங்கத்தின் செலவிலே அமைக்கப்பட்டது. கடந்த 2011 ஆண்டு இந்த குளமும், நினைவுச் சின்னமும் அகற்றப்பட்டதாக தெரிகிறது. ஏறத்தாழ 130 ஆண்டுகளாக இந்த இடத்தில் நிலைத்திருந்த இந்த வரலாற்றுச் சின்னம் எப்படி யாருக்கும் தெரியாமல் அகற்றப்பட்டது. ஏற்கெனவே நூறாண்டுகளைக் கடந்து நின்ற இந்த நினைவுச் சின்னம் ஒரு வரலாற்றின் சின்னமானது யாரும் அறியாததா? இந்திய தொல்லியல் சட்டத்தின்படி (Ancient Monuments and Archaeological sites and Remains (Amendments and Validations) Act 2010) பாதுகாப்பைப் பெற்ற இது எப்படி அகற்றப்பட்டது. நாம் அறியாமல் இருந்ததால், அறிந்தும் அமைதியாக இருந்ததால், அறிந்தும் பாராமுகமாக இருந்ததால், அந்த கல்லே இப்பொழுது கூப்பிடுகிறது. **'இவர்கள் பேசாமல் இருந்தால் கற்களே கூப்பிடும் '**– லூக்கா 19:40 (ரேனியஸ் மொழிபெயர்ப்பு)

இதையும் தாண்டி அகற்றியவர்கள் நினைவுச் சின்னத்தை பத்திரமாக நீதிமன்ற வளாகத்தில் வைத்ததும், அதன் வரலாற்றுப் பழமைக்கும், சமுதாய முக்கியத்துவத்தையும் கருதித்தான். அப்படியும் இந்த நினைவுச்சின்னம் இத்தனை ஆண்டுகள் எப்படி யாரும் கண்டுகொள்ளாமல் மறைந்திருந்தது என்ற கேள்வியும் எழுகிறது? சமீபத்தில் Whats app ல் பரவலாகப் பகிர்ந்தபோதும், அதை குறித்து சம்மந்தப்பட்டவர்களிடம் சிலர் தகவல் சொன்னபோதும் சம்மந்தப்பட்டவர்கள் யாரும் கரிசனை கொள்ளாததும், நடவடிக்கைகள் எடுக்காததும் ஏனோ? இந்த நிலைகளில் தான் சேலம் வரலாற்றுச் சங்கம் இந்த காரியத்தை வலிந்தேற்றது. தமிழ்நாட்டின் முதலமைச்சருக்கு கடந்த 29-06-2024 அன்று சேலம் வரலாற்றுச் சங்கம் சார்பாக இந்த வரலாற்றுச் சின்னத்தை பாதுகாத்திடக் கோரி வேண்டுகோள்

சமர்பித்த நிலையில், பல மாதங்கள் கடந்ததும் பதில் வரத் தாமதமானது. பதில் வரத் தாமதம் ஆனாலும் பதறாமல் காத்திருந்தோம்.

**பதிலும் வந்தது:**

29-06-2024 அன்று நாங்கள் தமிழ்நாடு முதலமைச்சருக்கு அனுப்பிய விண்ணப்பத்தில் 142ஆண்டுகள் பழமையான இந்த வரலாற்றுச் சின்னத்தைப் பாதுகாத்திடக் கோரிக்கை வைத்திருந்தோம். சரியாக ஆறு மாதங்கள் கடந்த நிலையில், கடந்த 14-12-2024 அன்று தமிழ்நாட்டு அரசின் தொல்லியல் துறை முதன்மைச் செயலாளரிடமிருந்து 29-11-2024 ஆம் தேதியில் கையொப்பமிட்ட அந்த கடிதம் இந்த விஷயத்திற்கான தீர்வாக பதிலாக வந்தது.

அதன்படி, வரலாற்றுச் சின்னத்தைப் பாதுகாக்க வேண்டி நாங்கள் வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட தொல்லியல் துறை அதற்கான தீர்வாக, திருச்சிராப்பள்ளியிலுள்ள அருங்காட்சியகத் துறைக்கு இந்த வரலாற்றுச் சின்னத்தைப் பாதுகாத்திடும் பொறுப்பைத் தந்தது. திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்ட இந்த பிஷப் ஹீபர் உயீர்நீத்த நினைவுச் சின்னம் காட்சிக்காக வைக்கப்படும் என்பது அறிந்து மகிழ்ந்தோம். இதற்கான நன்றி சொல்லுதல் கடிதம் தமிழ்நாட்டு அரசின் தொல்லியல் துறைக்கும், திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத் துறைக்கும் அனுப்பி வைத்தோம். கூடவே இந்த வரலாற்றுச் சின்னம் அப்படி திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத்தில் வைக்கப்படும்போது, நாங்கள் வந்து பார்க்க ஏதுவாக எங்களுக்குத் தெரிவிக்கும்படியும் கேட்டுக்கொண்டோம்.

**திருச்சிராப்பள்ளி தொல்லியல் அலுவலரின் ஆய்வறிக்கை:**

சிறப்பானதொரு ஆய்வறிக்கையை திருச்சிராப்பள்ளி தொல்லியல் அலுவலர் அளித்துள்ளார். அதற்காக அவருக்கு நான் நன்றி சொல்கிறேன்.

அருட்தந்தை ரெஜினால்ட் ஹீபரின் நினைவுப் பலகை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிகை :

இன்றைக்கு 142 ஆண்டுகள் பழமையான, பிஷப் ரெஜினால்ட் ஹீபர் அவர்கள் தொடர்பான நினைவுப் பலகை, திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சி வட்டம், திருச்சி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் இடது புறத்தில் அமைந்துள்ள நீர்த் தொட்டியின் அருகே, உடைந்த நிலையில் காணப்படுகிறது.

**அருட்தந்தை ரெஜினால்ட் ஹீபர் தொடர்பான வரலாற்றுக் குறிப்பு :**

அருட்தந்தை ரெஜினால்ட் ஹீபர் அவர்கள் கல்கத்தாவின் இரண்டாவது ஆங்கிலேய பிஷப்பாக இருந்தார். இவர் 1826ஆம் ஆண்டு இலங்கை செல்லும்போது திருச்சிராப்பள்ளிக்கு விஜயம் செய்துள்ளார். ஏப்ரல் 3ஆம் தேதி திருச்சிராப்பள்ளியில் சங்கை பிரெட்ரிக் சுவார்ட்ஸ் ஐயர் கட்டிய பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டார். ஏப்ரல் 3ஆம் தேதி அன்று பிஷப் ஹீபர் காலமானார். அவரது உடல் செயின்ட் ஜான்ஸ் தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இந்த செய்தியை இந்த நினைவுப் பலகை உறுதிப்படுத்துகிறது. இந்த பழமையான நினைவுப் பலகையை திருச்சி மாவட்ட அருங்காட்சியகத் துறையில் வைத்து பாதுகாத்திடலாம் என்பதை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்' என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

**முடிவாக**

அந்த வரலாற்றுச் சின்னம் திருச்சிராப்பள்ளி அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு பொதுமக்கள் பார்க்கும்படி வைக்கப்படும் வரை நமது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பதே இங்கே சொல்லப்பட வேண்டிய செய்தி. வரலாற்றுச் சின்னங்கள் மாபெரும் தியாகங்களின் சின்னங்கள். அவைகள் பேசும் வல்லமை கொண்டது. வார்த்தையின் வல்லமை கொண்ட அவைகள் எண்ணும் எழுத்தும் ஆனால், அழிந்தாலும் அவை சாட்சிகளாய் கூப்பிடும்.

'நாளை இந்தக் கற்கள் ஏதென்று உங்கள் பிள்ளைகள் உங்களைக் கேட்கும்போது' (யோசுவா 4: 6) நாம் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோமே. மீட்பின் வரலாறும், சுத்த சுவிசேஷ பிரபல்யத்தின் வரலாறும், தலைமுறை தலைமுறையாக பாதுகாக்கப்பட்டு சொல்லப்பட வேண்டியதும், சாட்சியாக அதன் சான்றுகள் நிலைநிறுத்தப்படவேண்டியதும் அவசியம். இவைகளைக் கருத்தாய் வாசிக்கும் வாசகரே உங்கள் பங்கும் பணியும் இதுபோன்ற பணிகளுக்கு தேவை. இணைந்து பயணிப்போம். இணைந்து செயலாற்றுவோம்.



**நினைவுப் பலகை இருக்கும் இடம்**

## திருநெல்வேலி கிறிஸ்தவ சமூகத்தில்

# காதல் திருமணம் நடந்த முதல் நிகழ்வு



பிரின்ஸ் ராஜா

பத்தே வயது நிரம்பிய ஒரு சிறு அனாதைப் பெண் திருவரங்கனேரியிலிருந்தாள். அவளுக்குப் பெற்றோரில்லையென்பது மட்டுமல்ல, அவள் அவர்களைப் பார்த்ததேயில்லை. அவர்கள் சாகும் பொழுது அவள் பச்சைக்குழந்தை. தகப்பனின் பெயர் ராமசாமியென்று சொல்லிக்கொள்ளுவார்கள். ஆனால் அவளுடைய தாயார் பெயரென்னவென்று அவளிடத்தில் யாரும் சொல்லவுமில்லை. அவள் கேட்டதுமில்லை. எப்படி அவள் வளர்ந்தாளென்பதும் அவளுக்குத் தெரியாது. எப்படியோ வளர்ந்தாள்! யாராவது கஞ்சி யூற்றுவார்கள்! ஏனென்றால், யார் என்னவேலை சொன்னாலும் அவள் செய்வாள்.

அவ்வாறிருக்கும் நாட்களில் திருவரங்கனேரி ஊராரனைவரும் கிறிஸ்தவர்களாயினர் (1842). கூட்டத்தோடு கூட்டமாய் அவளும் 'கிறிஸ்தவளா'கித், தன்னைப்போன்ற சிறுமியரோடு சேர்ந்து, அவ்வூருக்கு உபதேசியாராக நியமிக்கப்பட்ட வாலிபனான ஞானமுத்து உபதேசியாரிடத்தில், பத்துக்கற்பனை, கர்த்தருடைய ஜெபம், விசுவாசப்பிரமாணம் முதலியவைகளைக் கற்றதுடன், கிறிஸ்துநாதரைப் பற்றிய போதனைகளையும் பெற்றாள்.

அக்காலங்களில், விதவையான ஒரு அம்மாள் அவளைத் தன் வீட்டில் வேலைக்கு வைத்துக்கொண்டு ஆகாரம் கொடுத்துவந்தாள். தவிரவும், அவ்வூரிலிருந்த யோசேப்பு என்பவர் வீட்டிலும் அச் சிறுபெண்ணுக்குச் சலுகையுண்டு. யோசேப்பின் மனைவி அன்னம்மை ஒரு நல்ல மனுஷி. அவர்களுடைய மகள் பாக்கியம்! பதினான்கு பிராயத்தினள். இப்பெண் தன்னைவிட மூன்று நான்கு வயது சிறியவளாயிருந்தாலும், பாக்கியம் அவளைத் தன் சிநேகிதியாகவே பாவித்து நடத்தினாள். பாக்கியம் நல்ல அழகி. புற அழகுடன் உள அழகுமுடையவள். அன்புள்ளம் கொண்டவள். யாராலும் விரும்பப்படத்தக்கவள்.

ஞானமுத்து உபதேசியாரின் தகப்பனார் நற்குணத்தான் உபதேசியார் அனுக்கிரகபுரத்தில் வேலைசெய்து வந்தார். பக்திமிகுந்த திறமையுள்ள ஊழியன். தாய் முத்தாயி அவருக்கேற்ற உத்தமி.

காலக்கிரமத்தில் ஞானமுத்தும் பாக்கியமும் ஒருவரை யொருவர் நேசிக்கலானார்கள். மகன் மூலமாய் அதை யறிந்த பெற்றோர் திருவரங்கனேரிக்குச் சென்று, பாக்கியத்தின் பெற்றோரிடம் பெண் கேட்க வந்தனர். அவர்களும் சம்மதம் தெரிவிக்கவே, மிஷனெரி பெற்றிட் ஐயரிடம் திருமணச் செய்தியைத் தெரிவித்தார்கள். ஆனால் ஐயர், 'பாக்கியம் படிக்காத பெண்'ணென்ற காரணத்தினால் அக் கலியாணம் நடக்கக்கூடாதென்று தடுத்தார்! அதையறிந்த மணமக்களுக்குண்டான மனவேதனையை நாம் கிரஹித்துக் கொள்ளலாம்! பெற்றிட்டுக்கும் அது விளங்காமலில்லை. அவர் திருவரங்கனேரிக்குச் சென்று, **"பாக்கியத்தைப் பாளையங்கோட்டை பெண்கள் போர்டிங் பள்ளியிற் சேர்த்து, ஆறு மாத காலத்தில் எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்து, ஒரு உபதேசியாருடைய மனைவியென்ற பதவியில் அவளுக்கு வரப்போகும் பொறுப்புகளுக்கேற்ற பயிற்சியளித்து, அதன்பின் அவளுடைய கலியாணத்தை அனுமதிக்க"** உடன்பட்டார். பாக்கியமும் அவளுடைய பெற்றோரும் அதை வரவேற்றனர்.

இன்று மேரி சார்ஜென்ற் பெண்கள் உயர்நிலைப்பள்ளியென்ற ழைக்கப்படும் இப்பாடசாலை அக்காலத்தில் குருமார், உபதேசிமார். மிஷன் பாடசாலைகளின் ஆசிரியர், மற்றும் ஊழியர்களின் பெண் குழந்தைகளையும், அத்தகைய பணிவிடையாளர்களை மணந்து கொள்ளவிருக்கும் பெண்களையும் மட்டுமே போர்டிங் மாணவிகளாகச் சேர்த்துக் கற்பிக்கும் கல்வி நிலையமாக நடத்தப்பட்டது.

பாக்கியம் பாளையங்கோட்டைக்குப் போனபின், நம் அனாதைச் சிறுமி ஒருவிதத்தில் தனியவளானாள். பாக்கியத்தைத் தவிர

வேறு சிநேகிதிகள் கிடையாது. ஒருநாள் அவள் தங்கி வேலை செய்துவந்த வீட்டுக்கார அம்மாள் பேய்க்குளம் சந்தைக்குப் போனாள். அங்கிருந்து திரும்பும் வழியில், தகப்பனும் மகனுமான இரண்டு இந்து மனிதருடன் உரையாடிக் கொண்டே வந்தாள். அவர்களில் பெரியவர், தன் மகனுக்குப் பெண் தேடியலைவதாயும், தங்களிருவருக்கும் சமைத்துக் கொடுக்கவும் வீட்டைத் துப்புரவாக வைத்துக்கொள்ளவும் ஒரு பெண் வேண்டுமென்றும் சொன்னார். மேலும், தன் மகனுக்கு இதற்குமுன் ஒன்றன்பின் ஒன்றாய் இரண்டு பெண்களை மணமுடித்ததாகவும், இருவரும் அவனுடன் வாழச் சம்மதியாமல் ஓடிப்போய்விட்டதாகவும் கூறினார். அப்படியிருந்தும், அந்தம்மாள், தன்வீட்டில் ஒரு அனாதைப் பெண்ணிருக்கிறாள் என்றும், அவளை உடனே அவனுக்குக் 'கட்டிக்கொடுக்கத் தனக்குச் சம்மத மென்றும் தெரிவித்து அவர்களைக் கூட்டிக்கொண்டுவந்து, அவர்களிடத்தில் முக்கால் ரூபாய்ப்பணம் பெற்றுக் கொண்டு, அப்பெண்ணை நயமும் பயமும் காட்டி அவர்களுடன் அனுப்பினாள்.

அம்மனிதர் அவளைப் பாளையங்கோட்டைக்கு இரண்டு மைல் தொலைவுக்குள்ளிருந்த தங்கள் ஊருக்குக் கொண்டு வந்தனர். அங்கு பெரியவரின் மகன் அவளுக்குத் தாலி கட்டினான். அவளோ, இன்னமும் ஏற்ற வயது வராதபடியினால், கலியாணப் பெண்ணுக்குரிய உடல் நிலையடையாத சிறுமி. ஆகையினால் அவள் அந்த வீட்டில் ஒரு வேலைக்காரியாகவேதானிருந்து வந்தாள்.

நான்கு நாட்கள் கடந்தன. யாரோ அவளிடம், அவளுக்குத் 'தாலிகட்டினவனின்' முந்திய மனைவிகளின் சொந்தக்காரர் அவளை அடித்துத் துன்புறுத்திக் கொன்று போடுவார்களென்று சொல்லிவிட்டார்கள். அதைக் கேட்டதும், அவளுக்குச் செய்வதென்னவென்று தெரியவில்லை. ஒரே பயம் ! ஓடிவிட எண்ணினான்.

அன்று பிற்பகலில், அந்த வீட்டிலுள்ளவர்கள் வீட்டிற்குள்ளேயே 'சாமியை வைத்து, அதற்குப் பல படைப்புகளைப் படைத்துச் சாமிகும்பிட்ட பின், அப்படைப்புகளை உண்ண ஆரம்பித்தார்கள். அவளோ உண்ணவில்லை உண்ணும்படி 'தாலிகட்டினவன்' சொல்லியும் மறுத்துவிட்டாள். அன்று மாலை, ஏற்ற சமயம் கிடைத்ததும், பாக்கியம் இருக்கும் பாளையங்கோட்டை சமீபத்தில் தானிருக்கிறதென்று அறிந்திருந்தாளாகையால், அவளிடம் போய்விடத் தீர்மானித்து, வீட்டிலிருந்து தப்பி, வழி நடந்து பாளையங்கோட்டை தேவாலயத்தை யடைந்துவிட்டாள். அப்பொழுது மாலையாராதனை நடந்துகொண்டிருந்தது. ஆராதனை முடிந்து பெண்கள் வெளியே வரும்பொழுது, பாக்கியத்தைப் பார்த்து தன் கஷ்டங்களை யெல்லாம் அவளிடம் சொல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் நின்றிருந்தாள். அவளைப் பின்தொடர்ந்து வந்த (அவளுக்குத்) 'தாலி கட்டியவன்' அங்கு அவளைப் பிடித்துக்கொண்டான். தாலியைக் கழட்டி அவள் தன் கையில்தான் வைத்திருந்தாள்! அவன் அவளை பலவந்தமாகத் தன்னுடன் இழுத்துக் கொண்டு தன் ஊருக்குக் கொண்டு போனான்.

இரண்டு நாட்களுக்குப்பிறகு, அவள் மறுபடியும் தப்பி, இரவோடிரவாக நடந்து, மறுநாள் காலை, மிகுந்த களைப்புடைந்தவளாய்ச் சொந்த ஊரையடைந்து, ஞானமுத்து உடதேசியாரிடம் போய்ச் சேர்ந்தாள். அவர் அவளுக்கு ஆகாரம் கொடுத்து, ஆறுதல் கூறித் தைரியப்படுத்தினார். பின்னர் அவர், பெற்றிட் ஐயருக்கு அவளைப்பற்றிய செய்திகளைத் தையுமெழுதி, அதற்குமேல் தான் செய்ய வேண்டியது என்ன என்று தனக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டார். பெற்றிட் ஐயர் பதிலெழுதி, அவள் ஞானமுத்தின் பராமரிப்பிலேயே யிருக்கவேண்டு மென்றும், அந்த மனிதர் அவளைத் தேடிவந்தால், அவர்களைத் தன்னிடம் அனுப்புவிக்கவும் கட்டளையிட்டார். எதிர்பார்த்தபடியே, அவர்கள் அவளைத் தேடிவந்து, பெற்றிட்டிடம் அனுப்பப்பட்டார்கள். அவர் அவர்களைக் கடிந்துரைத்து, வந்தவழியே திருப்பிவிட்டார்! முக்கால் ரூபாய் நஷ்டம்!

சிலநாட்களில் பெற்றிட் திருவரங்கனேரிக்குப் போய் அவளைக்கண்டு, அழுகையோடு அவள் சொன்ன விருத்தாந்தங்களைக் கேட்டார். அந்த மனுஷனுடைய வீட்டில் மனைவியாகவல்ல, ஒரு வேலைக்காரியாகவே அவள் நடத்தப் பட்டிருந்தாள் என்றறிந்த பெற்றிட், அவளைத் தன்னுடன் அழைத்துச்சென்று, பாக்கியம் படித்துவந்த பள்ளியிற் சேர்த்தார். சிநேகிதிகள் மறுபடியும் ஒன்றுசேர்ந்தனர். பாக்கியம் அவளைத் தன் தங்கையைப்போல அன்புடன் அரவணைத்துக் கொண்டாள். அப்பள்ளியில் அவளை மேரி என்றழைத்தார்கள்.

சிலநாட்கள் சென்றன. பாக்கியம் படித்து முடித்து விட்டாள். பெறவேண்டிய பயிற்சிகளையும் திருப்திகரமாகப் பெற்றுக்கொண்டாள். டிசம்பர் மாதம் 7-ம் தேதி (1842) அவளுக்கும் ஞானமுத்து உபதேசியாருக்கும் திருமணம் நடந்தது.

மேரி பள்ளியில் படித்து வந்தாள். ஈராண்டுகளுக்குப் பின் அவள் வியாதிப்பட்டு, சாகுந்தருவாயிலிருந்த சமயம் பெற்றிற் ஐயர் அவளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் (6-2-1845). ஞானஸ்நானம் பெற்றபின், அவள் படிப்படியாய் குணமடைந்துவிட்டாள். மேலும் ஈராண்டுகள் கடந்தன. 1847 தொடக்கத்தில் பெற்றிற் தம்பதியர் சீர்மைக்குச் செல்லவேண்டியதிருந்தது. ஆகையால், பெற்றிற் அம்மாளுடைய ஆலோசனையின் பேரில், மேரியைப் போன்ற ஓர் அனாதையான, பண்ணைவிளை வட்டார உபதேசியார், வேதநாயகத்துக்கு அவளைத் திருமணம் செய்து கொடுத்தனர். வேதநாயகமும் மேரியும் பண்ணைவிளை டக்கர் ஐயருடைய பராமரிப்பில் உத்தம உபதேசித் தம்பதியராகக் கர்த்தருக்குகந்த சேவை செய்து அவரை மகிமைப் படுத்திவாழ்ந்தார்கள்.

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

தமிழகக் கிறிஸ்தவ திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்து வருகின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1780 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **‘புத்தக வனம்‘** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
christianhistorical@gmail.com

# Holy Matrimony

**An Exclusive Matrimonial for All Tamil Christians**

- *Free Registration*
- *Verified Profiles*
- *Easy Access*
- *Connect & Interact*
- *Membership plans*
- *100% Privacy*



**REGISTER NOW**

*Your Perfect Match is Just a Click Away!*

www.holymatrimony.co.in

**Call us 8428 777 333**

@holy_matrimony.co.in  Holy Matrimony.co.in

Scan to Register


Return Requested:


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**


To

Tamil Printed Book- For Private Cirulation Only


Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401